# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60 தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | ஐப்பசி15 | 29 | துல்ஹஃதா7(31-10-76)ஞாயிறு | புத்தகம்30 | இதழ் 55


## எனது ஒரே தலைவர் தந்தை செல்வாவேதான்!

### நீதிமன்றத்தில் திருச்செல்வம்!

"இங்கு நடைபெறும் இந்த வழக்கிலும்சரி— வெளியே நடைபெறும் எந்தக் காரியத்திலும்சரி— நான் ஏற்றுக்கொண்ட என்னுடைய ஒரே தலைவர் மூதறிஞர் செல்வா அவர்கள்தான்"! —இவ்வாறு உயர் நீதிமன்ற விசாரணையின்போது நீதியரசர் சமரவிக்கிரமாவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் திரு. மு. திருச்செல்வம் கியூ.சி.தெரிவித்தார்.

# தமிழ் ஈழத்தின் கீழைத்தென்கோடியிலுள்ள உகந்தை முருகனுக்கு ஆபத்து!

## பௌத்த வெறியர்கள் அட்டகாசம்! பொலீஸ் அதிகாரி மிரட்டல்!

## எதுவரினும் திருப்பணியை தொடர்வதென கோவில் நிர்வாகிகள் உறுதி!

தமிழ் ஈழத்தின் கீழைத்தென்கோடியில் பொத்துவிலுக்கு அருகில் அமைந்திருக்கும் உகந்தை முருகன் கோவிலுக்கும் சிங்களபௌத்த ஏகாதிபத்திய விஸ்தரிப்பு வெறியர்களினுல் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்துக்களின் மிகப் பழைமை வாய்ந்த புனிதத்தலமான இக்கோவில் நிலம் உகந்தைக்கு சற்றுததொலைவிலுள்ள 'குரும்பிக்கலை' பௌத்த விகாரைக்கு சொந்தம் என்று கூறி அதை ஆக்கிரமிக்கும் சதித்திட்டம் ஓர் புறமும், மேற்படி கோவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின குகையாய் இருப்பதாக கூறி கோவில் திருப்பணியை தடைசெய்யும் பொலிசாரின் சூழ்ச்சி மறுபுறமுமாக, முருகன் ஆலயத்தை விழுங்குவதற்கு திட்டமிட்ட முயற்சிகள் வாயைப் பிளந்து கொண்டு நிற்கும் சூழ்நிலையிலும், எதுவரினும் கலங்காது எதிர்ப்புகளை முறித்தெறிந்து உகந்தை முருகன் ஆலயத்தைக் காப்பாற்றியே தீருவது என்றும் ஆலயத்திருப்பணியை தொடர்ந்து நடத்துவதென்றும், மேற்படி கோவில் நிர்வாக சபையினரும், அப்பகுதியிலுள்ள இந்து இளைஞர்களும் உறுதியாக செயற்பட்டு வருகின்றனர்.

இதுபற்றி நமக்குக் கிடைத்துள்ள தகவல் வருமாறு:—

கீழைத் தென் கோடி தமிழ் ஈழத்தின் கடைசிப் பகுதியான பொத்துவிலின் அருகே இயற்கையுருவாய் அமைந்திருக்கும் உகந்தை மலை முருகன் கோவிலை புணர் நிர்மானம் செய்து புனித பூமியாக்கும் பணியில் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் பொத்துவில் முதல் மண்டூர் வரையிலான சைவ அன்பர்களாலும், இலங்கை இந்து மக்களாலும் திட்டம் வகுக்கப்பட்டு பொத்துவில் விபுலா

—8-ம் பக்கம் பார்க்க

● ஆளுங்கட்சியின் மற்றொரு சூழ்ச்சி?

## பொதுத்தேர்தலை இரண்டு நாட்களாக பிரித்து நடத்தத் திட்டம்?

அடுத்த பொதுத்தேர்தலை ஒரே நாளில் நடத்தாமல் இரண்டு நாட்களுக்கு பிரித்து நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கக் கூடுமென அரசியல் வட்டாரங்கள் இப்போதுகருதுகின்றன. பொதுத்தேர்தலில் தனக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கி வெற்றிபெறுவதற்காக இத்தகையதொரு சூழ்ச்சித்திட்டத்தைகடைசி நேரத்தில் அரசு செயற்படுத்தக்கூடும் என்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

1960க்கு முன்னர்பொதுத் தேர்தல்கள் ஒரே நாளில் நடவா பிரித்து வெவ்வேறு நாட்களில் நடைபெற்று வந்ததும், 1960க்குப் பின்பே ஒரே நாளில்தேர்தல் நடத்தும் முறை இலங்கையில் அமுலுக்கு வந்ததும் தெரிந்ததே. இப்போது வெற்றிவாய்ப்புக்கான சூழ்

—5-ம் பக்கம் பார்க்க

## 8000 கூட்டணித் தொண்டர்கள்'

கிழக்கில் நடைபெற்ற கிராம யாத்திரையின்பயனுகஇதுவரை 8000 தொண்டர்களை தாம் திரட்டியிருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறை செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து அறிவித்துள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத்தலைவர் திரு. மு. மாணிக்கம், மட்டக்களப்பு பா. உ. திரு. செ. இராசதுரை, தமிழ் மகளிர் பேரவை அமைப்பாளர் திருமதி கலாதம்பிமுத்து ஆகியோர் தலைமையில் 8.10.76ல் உகந்தையில் ஆரம்பித்த கிராம யாத்திரை, 29.10.76ல் வெருகலம்பதியில் முடிவடைந்தது.



அவசரகாலப் பிரகடனம் சட்டப்படி செல்லுபடியற்றது என்ற ட்ரயல் — அற் — பார் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரின் ஏகமனதான தீர்ப்பை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தாக்கல் செய்திருக்கும் மீளாய்வு, றிட், ஆகிய மனுக்கள் மீதான விசாரணை நீதியரசர்கள் ஜி. டி. சமரவிக்கிரம (தலைவர்) வி. ரி. தாமோதரம், திரு டி. ஏ. டி. எஸ். விஜயசுந்தர, திரு. நொயல் தித்தவெல, திரு. டபிள்யூ. டி. குணசேகரா ஆகியோர் முன்னிலையில் 25-10-76லிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சார்பில் ஆஜராகும் மூத்த சட்டத்தரணிகளான திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், வி. எஸ். ஏ. புள்ளைநாயகம், எம். திருச்செல்வம். எஸ். நடேசன், எச். டபிள்யூ. ஜெயவர்த்தனு ஆகியோரைப் படத்தில் காணலாம். (நீதிமன்றத்தைவிட்டு அவர்கள் வெளி[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்




கே. இராமலிங்கம்,
கொழும்பு-13

கே: வட்டுக்கோட்டைத் தொகுதிப் பா. உ. திரு. ஆ. தியாகராசா 'தமிழ்சோசலிச முன்னணி' என்றபெயரில் தேர்தற்காளான் கட்சியொன்றைத் தொடங்க விருப்பது எதைக்காட்டுகிறது?

ப: எப்படித்தான் குத்துக்கரணமடித்தாலும் அவருக்கு அடுத்த தேர்தலில் சிறீலங்கா சுதந்திர கட்சி டிக்கெட் கிடைக்கவே கிடையாது என்பதைக் காட்டுகிறது!

கே: தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் நீங்கள் சுதந்திரனில் முக்கியத்துவம் கொடுப்பதாகவும், வேறு சிலரைப் புறக்கணிப்பதாகவும் உங்கள் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்கு நீங்கள் தரும் பதிலென்ன?

ப: சுதந்திரன் யாரையும் திட்டமிட்டுப் புறக்கணிப்பதில்லை; அதே நேரத்தில் எல்லாச்செய்திகளுக்கும் இடம் தருவதற்கும் சுதந்திரனில் இடத்தட்டுப்பாடு உண்டு. சுதந்திரனைப் பொறுத்த வரை தனிப்பட்டவர்களை வளர்ப்பதைவிட தமிழீழ விடுதலை இலட்சியத்தை வளர்ப்பதிலேதான் நம்பிக்கையுண்டு; அந்த இலட்சியத்துக்காக அந்தரங்க சுத்தியுடன் பிரதிபலனை எதிர்பாராமல் யார் முழுமையாக தம்மை அர்ப்பணிக்கிறார்களோ அவர்களுக்கு தகுந்த மரியாதை தர சுதந்திரன் ஒரு போதும் பின்னிற்காது!

ஃ

கே. மனோகரன்,
யாழ்ப்பாணம்

கே: அடுத்த 5வது உலகத்தமிழ் மாநாட்டை இலண்டனில் நடத்தும் கருத்தை நீங்கள் வரவேற்கிறீர்களா?

ப: இலண்டனில் நடத்துவது மிகவும் வரவேற்கத்தக்கதுதான். ஆனால் இலண்டனிலுள்ள பல்கலைக்கழகமொன்று இதைப்பொறுப்பேற்குமானால் மிகவும் வசதியாகவிருக்கும்!

கே: சீன இலக்கியங்களில் பாலுணர்ச்சிக்கே இடமில்லையென்று ஒரு கம்யூனிஸ்ட் பிரமுகர் கூறியிருக்கிறாரே!

ப: இலக்கியங்களில் பாலுணர்ச்சியில்லாவிட்டாலென்ன? மக்கள் தொகைப் பெருக்கத்தில் சீனாதான் முன்னணியில் நிற்கிறதே!

ஃ

து. கந்தசாமி
மட்டக்களப்பு

கே: தனிப்பட்ட முறையில் தான் தனிக்கட்சி ஆட்சி முறையை ஆதரிப்பதாக குமாரசூரியர் கூறியிருக்கிறாரே (வீரகேசரி 25-10-76 இதழில்)?

ப: அதுதான் நான் ஏற்கெனவே கூறியிருந்தேனே பொதுத்தேர்தல் என்றால் குமார சூரியருக்கு குலைநடுக்கம் எடுப்பதாக. தனிக்கட்சி ஆட்சியென்றால் தேர்தலேயில்லாமல் 'நிரந்தர மந்திரி'யாக பதவியில் தொடர்ந்து ஒட்டிக்கொண்டிருக்கலாமே என்பதுதான் குமாரசூரியரின் உள்ளாந்தர ஆசை போலும்!

ஃ

எம். இராமதாஸ்,
கொழும்பு-14

கே: டாக்டர் என். எம். பெரேரா எப்படியிருக்கிறார்?

ப: அரசியலில் விரக்தியடைந்துவிட்டார்; தமது கடந்த கால வரலாற்றையும் மறந்துவிட்டார்; சிறையையுடைத்து வெளியேறி, யாழ்ப்பாணத்துக்கு சென்று அங்கிருந்து வல்வெட்டித்துறைவழியாக தமிழர்களின் உதவியுடன் சட்டவிரோதமாக நாட்டைவிட்டு வெளியேறி, இந்தியாவில் தமிழ்ப்பெயருடன் நடமாடிய தமது இளமைக் காலச் சம்பவங்கள் அவருக்கு நினைவிருந்தால், தமக்கு அவசியமில்லாத காண்டீபன் பிரச்சினையை அவர் தேசிய அரசுப்பேரவையில் கிளறியிருக்கமாட்டார்!

ஃ

செல்வி. ஜெயலலிதா,
வண்ணார்பண்ணை.

கே: தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் சக்தி சிறிமாவுக்கு மட்டுமேயுண்டு என்கிறாரே பீட்டர்கெனமன்!

ப: பொறுத்திருங்கள் — இன்னும் கொஞ்சக் காலத்தில், லெனினைவிட, ஏங்கெல்சைவிட, கார்ல் மார்க்சைவிட திருமதிதான் சிறந்த சோசலிச மேதையென்று கூறுவார்!

கே: 20 அம்சத்திட்டம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: அது சட்டரீதியாகப் பிறந்தது அல்ல—'வம்பிலே' பிறந்தது! அதாவது தமிழர் விடுதலை வேகத்தை முறியடிக்க அரசாங்கம் தன்னுடைய கையாட்களைக் கொண்டு நடத்திவரும் சாகஸ நாடகம்!

ஃ

கே. கே. சண்முகம்,
11ம் கிராமம், பட்டிருப்பு

கே: சிங்களவர்கள் சிறுபான்மையினமாக இருந்திருந்தால்...?

ப: நான் அவர்களின் உரிமைக்காகப் போராடுவதில் முன்னணிவகிப்பேன்!

கே: ஏன் இன்றையபெண்கள் நிர்வாண நாகரிகத்தை அணுகிக்கொண்டிருக்கிறார்கள்?

ப: அதுதான் இயற்கை நியதி! நாகரிகம் என்பது சுற்றிச் சுற்றி வரும் ஒரு வட்டம்; ஆதியில் ஏவாள் காலத்தில் நிர்வாணத்திலிருந்து ஆரம்பித்த பெண்களின் நாகரிகம், முடிவிலும் நிர்வாணத்தை நோக்கிச் செல்லுவதும், பின்னர் அதிலிருந்து விடுபட்டு, மீண்டும் பழையபடி ஆடை புனையத் தொடங்குவதும் இயற்கை நியதி!

ஃ

எஸ். எம். அப்துல்காதர்
மீராவோடை
வாழைச்சேனை

கே: தங்களின் குறிக்கோள் என்ன?

ப: குறிக்கோளற்றவர்களை குறிக்கோள் ஒன்றுடன் வாழும்படி தூண்டுவதே எனது குறிக்கோள்!

ஃ

கே. இராமலிங்கம்,
திருகோணமலை

கே: 'பனிக்கட்டிமுறிப்பு' கிராமசபையின் பழைய காலத்துச் 'சீல்' உங்களுக்கு எப்படிக்கிடைத்தது?

ப: உங்கள் தொகுதி எம். பி. திரு. நேமிநாதன்தான் கொடுத்தார்.

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

> திருவாளர் குயுக்தியார்
>
> 194 ஏ பண்டாரநாயக்க வீதி,
> கொழும்பு—12.

# கோமாளிகள்

## — ஒரு நோக்கு

"நாட்டுக்கே சேவை செய்ய நாகரிகக் கோமாளி வந்தானய்யா" — என்று பாடிக்கொண்டு 'நல்லதம்பி' திரைப்படத்தில் தோன்றினார் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன். இப்போதுதிரையரங்குகளில் காட்சிதரும் 'கோமாளிகள்' நாட்டுக்குப் பெரிதாக சேவையெதுவும் செய்யாவிட்டாலும்-நாட்டு மக்களை வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

'கோமாளிகள்' திரைப்படத்தில் 'கதை'யென்று சொல்வதற்கு எதுவும் இல்லாவிட்டாலும்—படம் சக்கைப்போடு போடுகிறதென்றால் — அதற்குக் காரணம் அதன் நகைச்சுவை அம்சம் மட்டுமல்ல சிறந்த தொய்வற்ற படப்பிடிப்பும் டைரக்‌ஷனும்தான்! இலங்கையில் இதுவரை தயாரிக்கப்பட்ட திரைப்படங்களில் நாம் கண்டிராத சிறந்த தொழில் நுணுக்கம் "கோமாளிகளில்" பளிச்சிடுகிறது.

ஒரு வீடும் சரி, அல்லது ஒரு நாடும்சரி, அதில் குடியிருக்கும் ஒவ்வொரு குடும்பத்தினரும் அல்லது இனத்தினரும், ஒருவர் உரிமையையும் சுதந்திரத்தையும் மற்றவர் மதித்து கௌரவித்துநடந்தால் மட்டுமே அந்த வீட்டில் அல்லது நாட்டில் அமைதியும் சந்துஷ்டியும் இருக்கும் என்பது தான் 'கோமாளிகள்' படத்தின் கருத்து என்று கூறுகிறார்கள்.

மரிக்காராக தோன்றி—கொழும்பு முஸ்லிம்களின் பேச்சுத்தமிழை 'தண்ணி பட்ட பாடாக' கையாண்டு சக்கைப்போடு போடுகிறார் ராமதாஸ். அவரது தொப்பியும் தோற்றமும் நடிப்பும் பலே ஜோர்! முஸ்லிம் பேச்சுத்தமிழை அவர் கையாளும் அழகே அழகு!

அப்புக்குட்டியாக தோன்றும் நடிகர் அசல் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கை கையாள்கிறார். நடிப்பும் இயற்கையாக இருக்கிறது,

உபாலியாக(சிங்களவராக) தோன்றும் நடிகர், சிங்களவர்களின் தமிழ் உச்சரிப்பை எவ்வித தட்டுத்தடங்கலுமின்றிக் கையாள்கிறார். அதே போல 'டேவிட்' பாத்திரம் ஏற்றுள்ள நடிகரும் சுமாராகச் செய்திருக்கிறார்.

பிராமணராகத்தோன்றும் பி. எச். அப்துல் ஹமீதின் நடிப்பு சற்று 'ஓவர்' தான். ஆனால் நன்றாகச் சிரிக்கவைக்கிறார்.

மற்றொன்று. இலங்கைச் சூழ்நிலையில் கொழும்பு முஸ்லிம்களின் பேச்சுத்தமிழையும், யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழையும்,சிங்களவரின் பேச்சுத் தமிழையும் கலந்து மண் வாசனை கமழ படத்தை தயாரித்தவர்கள், பிராமணராக தோன்றும் அப்துல் ஹமீதைக் கொண்டு 'அக்ர ஹாரத்தமிழ்' பேச வைத்திருப்பது கொஞ்சமும் பொருத்தமாக இல்லை. ஏனெனில் இலங்கையில் பிராமண சமூகத்தினரிடையே 'அப்துல் ஹமீது' பேசும் 'அக்கிரகாரத் தமிழ்' பேசப்படுவதில்லையே! வேண்டுமானால் அது நகைச்சுவைக்காக மட்டும் இருக்கலாமே தவிர— அதில் 'மண் வாசனை' அறவே காணப்படவில்லை!

சில்லையூர் செல்வராசனும் கமலினி செல்வராசனும் தென்னிந்திய தமிழ்ப் படங்களில் வரும் வழமையான மாமூல் வேலைகளை — அதாவது ஓடிப்பிடித்தல், காதல் டூயட் பாடுதல், குத்துச் சண்டை போடுதல் போன்றவற்றை—செய்துள்ளனர்.

இருந்தபோதிலும், கமலினி திரைப்படத்துக்கு புதுமுகமாக விருந்தபோதிலும், பாராட்டும்படி நடித்திருக்கிறார்.

ராமநாதனின் டைரக்‌ஷன் திறமை பலவிடங்களில் பளிச்சிடுகிறது.

'கோமாளிகள்' சிரிப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு பொழுதுபோக்குப்படமென்றாலும்—அதன் தொய்வற்ற படப்பிடிப்பும், திரைப்படத்தொழில் நுணுக்கங்கள் அதில் கையாளப்பட்டிருக்கும் பாங்கும், திறமையான டைரக்‌ஷனும் — ஈழத்துத் திரைப்பட உலகில் ஒரு புதிய நம்பிக்கையை யூட்டியுள்ளது.

அதாவது—கலை நுட்பம் செறிந்த நல்ல தமிழ்ப்படங்களைமிக விரைவில் ஈழத்தில் நாம் காணமுடியும் என்பதே அநத நம்பிக்கையாகும்!

அந்த நம்பிக்கையையூட்டியுள்ள 'கோமாளிகள்'திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் அதன் நடிகநடிகைகளுக்கும் இயக்குனருக்கும் நமது பாராட்டுக்கள்,

—கோவை

# தமிழ் ஈழம்

தமிழின் வாழ்விடம் தமிழ்ஈழம்
தமிழர் வாழ்விடம் தமிழ்ஈழம்,

தமிழன் ஆண்டது தமிழ்ஈழம்
தமிழால் ஆண்டது தமிழ்ஈழம்,

வடக்கும் கிழக்கும் தமிழ்ஈழம்
வடகீழ் கடல் எல்லை தமிழ்ஈழம்,

இலங்கை என்பது ஒருதீவு — அதில்
லங்கா — ஈழம் இருநாடு,

பறங்கி'டச்' சா(ஆ)ங்கிலர் இருநாடும்
பறித்தெடுத் தாண்டனர் போய்விட்டார்,

இலங்கை சுதந்திரம் எய்தியதும்
ஈழத்தை நசுக்குது ஸ்ரீலங்கா,

சிங்களர்க் குரியது ஸ்ரீலங்கா
தமிழர்க் குரியது தமிழ்ஈழம்,

எங்கள் நாடே தமிழ்ஈழம்
எமக்கே உரியது தமிழ்ஈழம்,

குடியரசானது ஸ்ரீலங்கா
அடிமையாகுது தமிழ்ஈழம்,

முடியாட்சி கண்ட தமிழ்ஈழம்
குடியாட்சி காணத் துடிக்குதடா,

அறத்தின் வழிவகுத் தாண்டவர் நாம்
கொடுங்கோ லாட்சியில் குமைகுவமோ,

அமைப்போம்! ஆள்வோம்! தமிழ்ஈழம்
அறவழி காட்டட்டும் தமிழ்ஈழம்.

—ஈழவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் மடல்

# பாலஸ்தீன விடுதலை இயக்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணியும்!

**அன்பு நண்பா,**

மதத்தால் வேறுபட்டிருப்பினும், இனத்தாலும் இன்பத்தமிழாலும் நமது சகோதரர்களாக விளங்குகின்ற இஸ்லாமியர்கள், இந்நாட்டில் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியக் கொடுங்கோலாட்சியின் இன ஒழிப்பு நடவடிக்கைகளையும், சிங்கள இனத்தின் ஆதிக்க வெறியையும் இன்றைய தினம் மெல்லமெல்ல உணர்ந்துகொண்டு வருகிறார்கள்; சிங்கள ஆக்கிரமிப்புத் தேசியத்தின் பாஸிஸ வெறியினால் நாள்தோறும் நடைமுறையில் தாம் பாதிக்கப்படுவதை அவர்கள் புரிந்துகொண்டு வருகிறார்கள்; இதனால் அவர்கள் மத்தியில் புதிய அரசியல் சிந்தனை முகிழ்த்துவருகிறது. தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் இணைந்து தமிழ் பேசும் மக்களுக்கெனத் தனித் தாயகம் ஒன்றை ஏற்படுத்தினால் மட்டுமே, இஸ்லாமியத் தமிழர்களும் இந்நாட்டில் தங்கள் தனித்துவத்தைப் பாதுகாததுக்கொண்டு வாழமுடியும் என்ற கருத்து அவர்கள் மத்தியிலே மெல்லமெல்ல — ஆனால் உறுதியாக உரம் பெற்று வளர்ந்து வருகிறது!

**"ஓர் இனம் ஆகாயத்தில் வாழமுடியாது; அந்த இனம் வாழ அந்த இனத்திற்கென்று ஒரு தாயகம்—ஒரு பிரதேசம் வேண்டும்; அந்தப் பிரதேசத்தில் அந்த இனம் அதிகாரம் செலுத்தக்கூடியதாக வாழவேண்டும்"** என்ற பாகிஸ்தான் சிற்பி முகம்மதலி ஜின்னாவின் தீர்க்கதரிசனம்மிக்க கூற்றை இஸ்லாமியத் தமிழர்கள் இன்றைய தினம் எண்ணிப்பார்க்கத் தலைப்பட்டுவருகிறார்கள்! இஸ்லாமியர்கள் வாழையடி வாழையாக, தலைமுறை தலைமுறையாக வாழ்நது வந்த விவசாயம் செய்துவந்த — அம்பாறை மாவட்டத்திலுள்ள நிலங்கள் — கந்தளாய், அல்லை போன்ற பகுதிகளிலுள்ள நிலங்கள்— திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் பறிபோய்விட்ட நிலையில் — எஞ்சிய நிலங்களையாவது பாதுகாப்பதற்கு ஏற்றவழி — மாற்ற முடியாத ஒரேவழி — தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து தமிழ்ஈழ இலட்சியத்துக்காக உழைப்பதுதான் என்று இஸ்லாமிய இளைஞர்கள் பலர் இன்று சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்!

இஸ்லாமியர்களிடையே—குறிப்பாக இஸ்லாமிய இளைஞர்களிடையே இன்றைக்கு ஏற்பட்டுவரும் இந்தச் சிந்தனை மாற்றம் — தங்கள் சுகபோகங்களுக்காக சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு சிந்துபாடிவரும் சிலருக்கு எரிச்சலையும் பதைபதைப்பையும் ஏற்படுத்தியுள்ளதை அவர்கள் விடும் அறிக்கைகளிலிருந்தும் எழுதும் கட்டுரைகளிலிருந்தும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராட வேண்டும் என்ற சிந்தனையிலிருந்து முஸ்லிம் இளைஞர்களை திசைதிருப்புவதற்காக—வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்துக்கு மிண்டுகொடுப்பதற்காக —தமிழர் விடுதலைக் கூட்டணி மீது இல்லாத பொல்லாத பழிகளை சுமத்தி—கூட்டணி மீது இஸ்லாமிய மக்களுக்கு விரோதத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் கைங்கரியத்தை செய்வதற்கு சிங்கள ஏகாதிபத்தியத்தின் கங்காணிகளான 'அறிஞர்கோன்களும் 'அரசியல் மாணவன்களும்' படாதபாடுபட்டுவருகின்றனர் நாள்தோறும்!

தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், தமிழரசுககட்சியினரும் இஸ்ரேலிய ஆதரவாளர்கள்—பாலஸ்தீன விடுதலைஇயக்கத்தின் எதிர்கள்—என்று ஒரு திட்டமிட்ட பொய்ப் பிரசாரம் சிலரால் முடுக்கிவிடப்பட்டுள்ளது கடந்த சில நாட்களாக!

**நண்பா, நம்முடைய மேடைகளில் ஒரு சில தலைவர்கள், இஸ்ரேலையும், யூதர்களையும் உதாரணம் காட்டிப்பேசுகின்றனர் என்றால் — அதன் பொருள் நாம் பாலஸ்தீன விடுதலை இயக்கததின் எதிரிகள் என்பதா? எந்த ஒரு சின்ன இனமும — அது எவ்வளவுதான் எண்ணிக்கையில் சிறியதாக இருந்தாலும் — உறுதியுடன் துணிந்து நின்றால் தான் எடுத்த காரியத்தில் வெற்றியீட்டமுடியும் என்கிற நம்பிக்கையை நம் மககளுக்கு ஏற்படுத்தும்ஒரேநோக்கத்துடன் தான், இஸ்ரேலை உதாரணம் காட்டுகிறோமே தவிர—இஸ்ரேலின் நடவடிக்கைகள் அத்தனையும் முறையானதென்றோ, சரியானதென்றோ தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரு போதும் கூறியதில்லை!**

சில ஆண்டுகளுக்கு முன்னர் பாலஸ்தீன விளையாட்டு வீரர்கள் சிலர் இஸ்ரேல் ஆட்சியாளரால் மனிதாபிமானமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டபோது, அதைக் காட்டுமிராண்டித் தனம் என்று கூறி கடுமையான வார்த்தைகளால் இஸ்ரேலைக் கண்டித்து சுதந்திரன் ஏட்டில் நான் தலையங்கம் தீட்டியிருந்ததும் இப்போது நினைவிலிருக்கிறது.

நண்பா, தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் — தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் — உலகில் எங்கெல்லாம் ஏகாதிபத்தியத்தையும் அடக்கு முறையையும் எதிர்த்துப்போராட்டங்கள் நடைபெறுகின்றனவோ—அங்கெல்லாம அடக்க[illegible]டுகிறவர்களின் — விடுதலைக்குப்போராடுபவர்களின் வெற்றிக்காக நாம் நமது ஆத்மீக தார்மீக ஆதரவை அளித்து வருகிறோம்! அடக்குமுறை, ஆதிக்க வெறி, ஏகாதிபத்தியம்—எந்த வடிவத்தில் வந்தாலும், அதை எதிர்த்துப்போராட வேண்டுமென்பதே நமது கொள்கையாகும்!

இதே அடிப்படையில்தான்—இங்குபெரும்பான்மை இன ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலைக்குப்போராடிவரும் நாம், — தென்னாபிரிக்காவிலும், ரொடீசியாவிலும் சிறுபான்மை இனவெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலைக்குப்போராடும் கறுப்பு இனமக்களின் போராட்டத்தையும் ஆதரித்து நிற்கிறோம்!

விடுதலைக்குப்போராடிய வங்கதேச முஸ்லிம் மக்களை — பாகிஸ்தான் வெறியாட்சி சுட்டுக்கொன்றபோது — மிருகத்தனமாக அங்கு மாதர்கள் கற்பழிக்கப்பட்டபோது — பாகிஸ்தானின் இந்தஏகாதிபத்திய அடக்குமுறையை மிலேச்சத்தனத்தை எதிர்த்து, வங்கதேச முஸ்லிம்களின் வாழ்வுக்காக இந்நாட்டின் தேசிய அரசுப்பேரவையிலும், வெளியிலும் முதன் முதலாக உக்கிரமாகக்குரல் கொடுத்தவர்கள் தமிழரசுக் கட்சியினர்தாம் என்ற உண்மையை வரலாறு குறித்து வைத்துக் கொண்டிருக்கிறது. இன்று பாலஸ்தீனத்துக்காக பேசுபவர்கள் யாரும் அன்று வங்கதேச மக்களுக்காகப்பேசியது கிடையாது; பேசாதது மட்டுமல்ல — பாகிஸ்தான் வெறியர்கள் வங்க மக்களைச் சுட்டுக்கொல்வதற்காக இலங்கையூடாக விமான மூலம் ஆயுதங்கள் கொண்டு சென்றதையும் அன்று ஆதரித்து நின்றார்கள்; நாம் மட்டுமே அதை எதிர்த்தோம்!

**ஆகவே உலகில் விடுதலைக்குப் போராடுபவர்கள் யாராக இருந்தாலும்—அவர்கள் பாலஸ்தீனியர்களாக இருந்தாலும் சரி பிலிப்பைன் நாட்டு முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, தென்னாபிரிக்க, றொடீசிய கறுப்பு இனமக்களாக இருந்தாலும் சரி— விடுதலை விரும்பிகளுக்கெல்லாம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தார்மீக—ஆத்மீக ஆதரவு என்றும் உண்டு! இது இயற்கையானது ஏனெனில் இங்கும் நாம் ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம்!**

பாலஸ்தீனிய மக்கள் நாடிழந்து, இன்று நிர்க்கதியாகியதற்கு ஒரே காரணம—பாலஸ்தீனத்தில் பாலஸ்தீனியர்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்த நிலங்களில் யூதர்கள் பெரும்பான்மையாகக் குடியேறி அவர்களது நிலத்தை ஆக்கிரமித்ததுதான், அதே நடவடிக்கைதான் இங்கும் நடைபெறுகிறது. பரம்பரை பரம்பரையாகத் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களில் சிங்கள ஏகாதிபத்தியம், சிங்களவர்களைத் திட்டமிட்டுக் குடியேற்றி, முஸ்லிம்களினதும் தமிழர்களினதும் நிலங்களை ஆக்கிரமித்துவருகிறது! முஸ்லிம்களுக்கு சொந்தமான ஏராளமான நிலங்கள் இன்று சிங்களவர்களின் கைகளுக்கு சென்றுவிட்டன; இதன் காரணமாக இங்கும் ஒரு 'பாலஸ்தீனப் பிரச்சினை' உருவாகிவருவதை, சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு ஆலவட்டம் வீசும் முஸ்லிம் தலைவர்கள் இன்னும் உணர மறுக்கிறார்கள்; ஆனால் முஸ்லிம் இளைஞர்கள் இதை உணர்ந்துவிட்ட காரணத்தினால்தான், இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைய ஆர்வமுடன் முன்வருகிறார்கள்!

நண்பா, முஸ்லிம்களுக்கு தமிழரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் விரோதிகள் என்று காட்டுவதற்குப் பிரமயப் பிரயத்தனம் நடைபெறுகிறது. ஆனால் முஸ்லிம்களின பாரம்பரிய நிலங்கள் சிங்களவர்களின் திட்டமிட்ட குடியேற்றத்தால் ஆக்கிரமிக்கப்படுவதை உணர்ந்து, 1949ம் ஆண்டிலிருந்தே அதை எதிர்த்து தனித்து நின்றுபோராடிவரும கட்சி தமிழரசுக் கட்சியென்பதை கிழக்கிலங்கையின் இஸ்லாமிய சகோதரர்கள் அறிவார்கள்! தந்தை செல்வா அவர்கள்தான் முஸ்லிம்களின் நிலம் ஆக்கிரமிப்புக்கு பலியாவதை உணர்ந்து அதை எதிர்த்து தீர்க்கதரிசனத்துடன் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே குரல் கொடுத்த ஒரே தலைவராகும்! மூதறிஞர் செல்வா அன்று கூறிய இந்த பெரிய அரசியல் உண்மையை சிங்கள வெள்ளம் கழுத்தளவு வந்த பின்னர் இன்றுதான் இஸ்லாமிய மக்கள் உணரத்தலைப்பட்டிருக்கிறார்கள்!

முஸ்லிம்களின் பாரம்பரிய நிலம் பறிக்கப்படுகிறது; அவர்களது முக்கிய தொழிலான வியாபாரம், வர்த்தகம், சிங்களமயமாகிவருகிறது; இன்று அவர்கள் அச்சமின்றி நிம்மதியாக வாழவும் முடியாதென்ற நிலை புத்தளம் சம்பவங்களுக்குப் பின்னர் ஏற்பட்டுவிட்டது' எந்த நேரத்திலும் சிங்களவர்களின் ஆக்கிரமிப்பு வெறியுடன் மோதவேணடிய நிலையில் இன்றைக்கு சிங்கள நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள்!

அண்மையில் கற்பிட்டியில் 'அல்லா' ஒருவரையே வணங்கும் இஸ்லாமியர்களை பலவந்தமாக துப்பாக்கி முனையில் அரசமரத்தைச் சுற்ற வைத்ததும் சிங்கள பௌத்த ஆதிக்க இனவெறியின் வெளிப்பாடுதான் என்பதை யார்தான் மறுத்திடமுடியும்?

அண்மையில் நடைபெற்ற புத்தளம் கலவரத்தின்போது இஸ்லாமியர்கள் ஏறத்தாள 271 பேர் வீடிழந்தனர்; 44 கடைகள் அடித்து உடைக்கப்பட்டும், தீவைக்கப்பட்டும் சேதத்துக்குள்ளாகின; இரண்டு பள்ளிவாசல்கள் நொறுக்கப்பட்டன; இருவர் கொல்லப்பட்டனர்; பள்ளிவாசலில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஏழு பேர் உயிரிழந்தனர்! இத்தனை அநியாயங்களையும் கண்டிப்பதற்கு முஸ்லிம் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் எவருக்கும் துணிச்சல்வரவில்லை; கண்டித்தால் பதவி போய்விடும் என்ற அச்சம் அவர்களுக்கு; ஆனால் இவற்றைக்கண்டித்து பொது விசாரணை நடத்தும்படி பிரதமருக்கு உடனடியாக துணிவுடன் இடித்துரைத்த ஒரே ஒருவர் உண்டென்றால் - அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான தந்தை செல்வா அவர்கள்தாம்!

ஆம் நண்பா, தமிழர் விடுதலைக்கூட்டணி, முஸ்லிம் மக்களின் வாக்குகளை எதிர்பார்த்து இவ்வாறு காரியமாற்றவில்லை; அநீதி எங்கு நடந்தாலும், யாருக்கு நடந்தாலும், அதை எதிர்ப்பதுதான் எங்கள் அரசியல் தர்மம்! எந்தவித சுயநலமுமின்றி — தமிழ்பேசும் மக்கள் தமக்கோர் தாயகம் கண்டு—அதில் தம்மைத்தாமே ஆண்டு தலைநிமிர்ந்து சகோதரர்களாக வாழவேண்டுமென்பதே நமது குறிக்கோள்!

பாலஸ்தீனியர்கள் தமக்கோர் தாயகம் கோருகிறார்கள்; அதேபோல தமிழ்பேசும் மக்களாகிய நாமோ நமது தாயகத்தில் நமது அரசை உருவாக்கப் போராடுகிறோம்! இந்தப போராட்டத்தில் இஸ்லாமிய மக்களும் வருங் காலத்தில் இணைவதை எந்த பொய்ப்பிரசாரத்தினாலும் தடுத்துவிட முடியாது; ஏனெனில் இஸ்லாமிய இளைஞர்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

**உன் அன்புத் தோழன்.**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# பஸ்ஸை தவறவிட்டவர்கள்!

“நாட்டைப் பிரிப்பது என்ற கோரிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்தை நடத்துவது இயலாத ஒன்ருகும் என்பதை அரசு சார்பிலும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் கூறுகிறேன். இதனுல், தீர்க்கவேண்டிய பிரச்சினைகள் மேலும் சிக்கலாகிவிடும்!”

—யாழ்ப்பாணத்தில் தேசிய வீடமைப்பு செயலகத்தை திறந்துவைத்துப்பேசிய அமைச்சர் பீட்டர் கெனமன் மேற்கண்டவாறு திருவாய்மலர்ந்தருளியிருக்கிருர்!

பேச்சுவார்த்தை பற்றி அண்மைக் காலமாக புலம்பித்திரிபவர்கள் யார்?

தம்மைப்பேச்சுவார்த்தைக்கு அழைக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எவரிடமும் மண்டியிட்டு ஒருபோதும் கெஞ்சியதில்லை!

சிங்கள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை என்ற வார்த்தையைக்கேட்டாலே இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களுக்கு — குறிப்பாகத் தமிழ் இளைஞர்களுக்கு—அது வேம்பாகக் கசப்பது நமக்கு நன்ருகத்தெரியும். பேச்சுவார்த்தையென்ருலே காததூரம் ஓடுகிருர்கள் அவர்கள்! கடந்த கால அனுபவம் தந்த பாடம் இது!

இந்நிலையில் — பேச்சுவார்த்தையென்ற மாயாஜால வார்த்தையை அண்மைக்காலமாக வெறுமனே உச்சரித்துவருபவர்கள் அரசாங்கக்கட்சியைச் சேர்ந்தவர்கள் தாம். கடந்த ஆறரையாண்டுகால ஆட்சியில் தமிழினத்துக்கு எப்படியெல்லாம் கொடுமை செய்யமுடியுமோ — அப்படியெல்லாம் கொடுமை செய்துவிட்டு— தேர்தல் நெருங்கும் சமயத்தில் தமிழ் மக்களின் வாக்குகளை தட்டிக்கொள்வதற்காக “பேச்சுவார்த்தை” யென்று வார்த்தை ஜாலம் செய்து தமிழ் மக்களை ஏமாற்றலாமென ஆளுங்கட்சியினர்தாம் கனவு கண்டு வருகிருர்கள்!

இப்போது பீட்டர்கெனமன் விஷயத்தைப்போட்டு உடைத்துவிட்டார்! அதாவது நாட்டைப் பிரிப்பது என்ற கோரிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தமுடியாது என்று வெளிப்படையாக கூறிவிட்டார். இதை வேறு வார்த்தைகளில் கூறப்போனுல், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தைக்கு இடமில்லையென்று கூறிவிட்டார். இதை இன்னும் தெளிவாகச்சொல்லப்போனுல்—தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மையான பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைக்கு இடமில்லையென்று கூறிவிட்டார்!

பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தையென்று அர்த்தமற்ற கோஷத்தையெழுப்பி, தமிழ் மக்களின் மனத்தைக் குழப்பித் திசைதிருப்பாது — அரசாங்கத்தின் உள்ளக்கிடக்கையை அப்படியே பகிரங்கப்படுத்தியுள்ள பீட்டர்கெனமனைப் பாராட்டவேண்டும்!

பிரிவினைக்கோரிக்கையின் அடிப்படையிலன்றி — வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக்கூடிய அருமையான சந்தர்ப்பங்கள் கடந்தகாலங்களில் அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்டன!

அவர்கள் அதைக்கோட்டை விட்டு விட்டார்கள்! பஸ்ஸை தவறவிட்டது மட்டுமன்றி, கடைசி பஸ்ஸையும் தவறவிட்டு விட்டார்கள்!

அரசியல் நிர்ணய சபையில் புதிய அரசியல் சட்டம் தயாரிக்கப்பட்டபோது பிரிவினைக்கோரிக்கை முன்வைக்கப்படவில்லை; அப்போது தமிழர் பிரதிநிதிகளை அழைத்துப்பேசி பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயற்சித்திருக்கலாம். தமிழ் பிரதிநிதிகள் அதற்கு எவ்வளவோ முயற்சிசெய்தும், ஆட்சியாளர்கள் இறுமாப்புடன் அதற்கு இணங்கவில்லை!

தமிழர் கூட்டணி ஆறு அம்சக்கோரிக்கையை ஆட்சியாளருக்கு அனுப்பி வைத்தபோது, அதில் பிரிவினைக் கோரிக்கை இருக்கவில்லை! அரசாங்கம் விரும்பியிருந்தால் அப்போது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழர் பிரதிநிதிகளை அழைத்துப்பேசி பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண முயற்சித்திருக்கும்! ஆனுல் ஆட்சியாளர்களின் ஆதிக்கவெறி அவர்களை அதற்கும் விடவில்லை!

ஆறு அம்சக்கோரிக்கையை உதாசீனம் செய்ததன் மூலம், சிங்கள ஆட்சியாளர்கள் சமாதானத்துக்கான கடைசி பஸ்ஸையும் தவறவிட்டு விட்டார்கள்!

இப்போது தமிழ்தேசிய இனம் “சுதந்திரத் தமிழ் ஈழம்” என்ற மாற்றமுடியாத இறுதி இலட்சியத்தை நோக்கி முடிவான பயணத்தை நடத்துகின்றது. இதிலிருந்து பின்வாங்கவோ, திரும்பிப்பார்க்கவோ தமிழ் மக்களுக்கு இனிநேரமில்லை! எத்துணை துன்பங்கள், இடர்கள் எதிர்ப்படினும், இந்த விடுதலைப் பயணத்திலிருந்து தமிழினம் விலகப்போவதில்லை! பேச்சுவார்த்தையென்ற மாரீசமானைப் பின் தொடர்ந்து சீதையை — அதாவது தமிழ் ஈழத்தை இழக்க தமிழ் சமுதாயம் முட்டாள் அல்ல!

தமிழ்ஈழப் போராட்டம் உக்கிரமடையும்போது— அதை உலகம் அறியும்போது — ஐ. நா. மன்றத்தில் எங்கள் சுதந்திரக்குரல் எழுப்பப்படும்போது — பேச்சுவார்த்தைக்கு வரும்படி சிங்கள ஏகாதிபத்தியம் தமிழினத்திடம் மண்டியிட்டழைக்கும் நாள் வந்தேதீரும்!

விடுதலையொன்று தவிர — தமிழ்ஈழப் பிரிவினையொன்று தவிர — வேறேதும் நமக்குத் தேவையில்லை; அதற்குக் குறைந்த எந்தச் சலுகையும் நமக்கு வேண்டியதில்லை! இதுவே ஈழத்தமிழனின் இதயகீதமாகும்.

# “தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்!”

## தேசிய ஒற்றுமைக்கு அது ஒன்றே வழி!

### ஐ.நா.மன்றக் கருத்தரங்கில் உடுப்பிட்டி சிவா முழக்கம்!

“யாருக்கும் மனமுறிவு ஏற்படாமல் — இரத்தம் சிந்தும் நிலைமை ஏற்படாமல்— சமாதானமான முறையில் தமிழ்தேசிய இனத்தின்சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்படுமானுல் மட்டுமே இந்நாட்டில் தமிழ் — சிங்கள ஒற்றுமை நிலைத்து நீடிக்கமுடியும். ஒரு சுதந்திரத் தமிழ் நாட்டை நிறுவுவது என்ற நமது முடிவு இறுதியானது; தீர்க்கமானது; மாற்றமுடியாதது என்பதையும் நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்!”

—இவ்வாறு சென்ற 27-10-76 புதன் கிழமை மாலை 5மணிக்கு இலங்கை ஐ. நா. மன்றம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் பேசிய தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவரான திரு, மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார். ‘சிறீலங்கா பவுண்டேஷன் இன்ஸ்டிட்டியூட்டில்’ நடைபெற்ற இக் கருத்தரங்குக்கு ஹாஜி எம். ஏ. ரஷீத் தலைமை தாங்கினுர்.

திரு சிவசிதம்பரம் அங்கு பேசுகையில், தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் ஈழ அரசை அமைப்பது என்ற மாற்றமுடியாத முடிவுக்கு வந்ததற்கான காரணிகளை ஆரம்பத்திலிருந்து எடுத்து விளக்கினுர், சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணுசலம் காலத்திலிருந்து தமிழ்பேசும் மக்கள் சிங்கள அரசியல் தலைவர்களால் எப்படி எப்படியெல்லாம் ஏமாற்றப்பட்டு அணைப்பப்பட்டு வந்திருக்கிருர்கள் என்பதை ஆதியோடந்தமாக திரு. சிவசிதம்பரம் தமது பேச்சில் எடுததுரைத்தாா.

1948ம் ஆண்டில் ஆங்கிலேயன் வெளியேறிய பின்னர், தமிழினத்தை அழித்தொழிப்பதற்காக திட்டமிட்டுகொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டங்கள், வாக்குரிமைச்சட்டங்களை எடுத்துக் காட்டிய திரு. சிவசிதம்பரம், சோல்பரி அரசியல் திட்டத்தின் 29வது விதிக்கு முரணுகவே இவை நடைபெற்றதாகத்தெரிவித்தார். தமிழ்ப் பகுதியில் அரசாங்க உதவியுடன் நடைபெற்றுவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், தமிழினத்தை இரண்டாந்தர நிலைக்குத் தள்ளிய சிங்களம் மட்டும் சட்டம் ஆகியவற்றையும் திரு. சிவசிதம்பரம் எடுத்துக்காட்டினுர். சர்வதேச கல்விக்கொள்கைக்கு முரணுக திறமையடிப்படை புறக்கணிக்கப்பட்டு, மொழியடைப்படைப்பில் தரப்படுத்தல் திட்டம் கொண்டு வரப்பட்டதன் காரணமாக தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக கல்வி ஆண்டுக்கு ஆண்டு எவ்வளவு தூரம் படிப்படியாக பாழடிக்கப்பட்டு வந்துள்ள தென்பதை புள்ளிவிபரங்களுடன் திரு. சிவசிதம்பரம் அங்கு நிறுவினர்.

‘1972ல் கொண்டுவரபட்ட புதிய அரசியல் சட்டம் சட்டப்படிசெல்லுபடியற்றது; முந்திய அரசியல் சட்டத்திற்கும் 1972ம் ஆண்டின் புதிய அரசியற் சட்டத்திற்குமிடையே சட்டபூர்வமான தொடர்பு (Legal Continuity) கிடையாது. சட்டபூர்வமான தொடர்பின்றி புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு சர்வதேச சட்டப்படி இரண்டு விதமான சூழ்நிலை இருக்கவேண்டும்; ஒன்றில் மக்களின் இணக்கத்துடன் புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கலாம்; அல்லது புரட்சி மூலம் உருவாக்கலாம். இலங்கையின் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு தமிழ்தேசிய இனத்தின் சம்மதத்தை ஆட்சியாளர் பெறவில்லை; அத்துடன் அவர்கள் தமிழ் மக்களைப்போரில் கைப்பற்றவும் இல்லை; எனவே தமிழ் தேசிய இனத்தைப்பொறுத்தவரை புதிய அரசியல் சட்டம் சட்டபூர்வமற்றது; தமிழ் மக்களால் அது நிராகரிக்கப்பட்டும் விட்டது!”

இவ்வாறு தமதுபேச்சில் குறிப்பிட்ட திரு. சிவசிதம்பரம், “சிங்கள அரசாங்கங்களுடன் ஒப்பந்தங்கள் செய்து அலுத்துவிட்டோம்; 1957ம் ஆண்டு செய்யப்பட்ட பண்டா — செல்வா ஒப்பந்தமும், 1965 ஏற்பட்ட டட்லி—செல்வா ஒப்பந்தமும் சிங்களக் கட்சிகளின் திட்டமிட்ட எதிர்ப்பினுல் சிதைக்கப்பட்டுவிட்டன. எனவே சிங்களத் தலைவர்களை இனியும் நம்பி நாம் மோசம்போகத் தயாராக இல்லை” என்று எடுத்துரைத்தார். இருபதுஅம்சத்திட்டம் பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் திரு. சிவசிதம்பரம் சுடச்சுடச் பதிலளித்தார்.

## ஜெனிடீமெல் பேச்சு!

இக்கருத்தரங்கில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் பேசிய ஜெனிடீமெல், ஆகிங்லேயர் வருவதற்கு முன்னர் இலங்கை ஒரே நாடாக இருந்ததில்லையென்றும், தேசிய ஒற்றுமை இங்கு நிலவியதில்லையென்றும், குறிப்பிட்டார். 1505ம் ஆண்டு போர்த்துக்கேயர் வந்தபோது, யாழ்ப்பாண அரசு மிகவும் சக்திவாய்ந்த



ஒரு அரசாக விளங்கியதென்பதையும் அவர் ஒப்புக்கொண்டார். இலங்கை ஐந்து நாடுகளாக — அரசுகளாக அன்று பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடைபெற்றுவந்துள்ளதென்பதையும் அவர் சுட்டிக்காட்டினுர். யூ. என். பி. ஆட்சிக்கு வந்தால், ஓரளவு தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படுமென்ருர்.

கேள்வி நேரத்தின்போது, பண்டா — செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டியாத்திரை செய்த ஜே. ஆர். ஜெயவர்த்தனுவா தமிழர்களின் உரிமைகளை தரக்கூடியவர்? இதை நம்பும்படி கூறிகிறீரா என்று ஜெனி டீ மெல்லிடம் கேட்டபோது— நான் ஐக்கியதேசியக்கட்சிக்குப் புதியவன்; ஆனுல் ஜே. ஆரின் கூற்றில் எனக்கு நம்பிக்கையுண்டு என்று கூறிச்சமாளித்துச் கொண்டார். ஆனுல் தமது ஐ. தே. கட்சி தமிழ்மக்களின்தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் பேசித்தான் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்குமே தவிர — கண்டவர் கடியவர்களுடன் பேச மாட்டோம் என்ருர்.

பழைய காலத்திலிருந்தது போல் — சிங்கள, தமிழ் இனங்கள் தனித்தனியே பிரிந்து தனித் தனியான அரசுகளின் கீழ் வாழ்ந்தாலென்ன என்ற கேள்விக்கு ஜெனிடீமெல் பதிலளிக்கையில், அதை வருங்காலத்தில், தமிழ் மக்களும் சிங்களமக்களுமே முடிவுசெய்யவேண்டும் என்ருர்.

சுடர்
CHUDAR

ஐப்பசி இதழில்!

- கவிஞர் காசி ஆனந்தனின் “கணைகள்” மற்றும் தித்திக்கும் கவிதைகள்—
- ‘காண்டேகர்’ பற்றிய சிறப்புக்கட்டுரை—
- 147 மணித்தியாலங்கள் நடந்தவருடன் பேட்டி—
- மூன்று சிறு கதைகள்—
- கே. எஸ். ஆனந்தனின் தொடரோவியம் மற்றும் சுவையான துணுக்குகள் கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கி.

இப்பொழுது எங்கும் கிடைக்கும்
விலை ரூபா 1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கச்சேரியில் சிங்கள வெரியாட்டம்!

யாழ்ப்பாணம் கச்சேரியில் வெடிமருந்து பரிசோதகராகக் கடமையாற்றும் தமிழ் தெரியாத சிங்கள உத்தியோகத்தர் ஒருவர் வெடிமருந்து அனுமதிச் சீட்டு பெறுவதற்கு தமிழில் விண்ணப்பம் அனுப்புபவர்களை சிங்கள மொழிபெயர்ப்பும் அதனுடன் கொடுக்குமாறு வற்புறுத்துகிறார் எனவும், இதனால் தமிழில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்படுகின்றன எனவும் 'பலர் எழுத்துமூலமாகவும், நேராகவும் ஊர்காவற்துறை பா.உ. திரு. கா. பொ. இரத்தினம் அவர்களிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் பிரதம அமைச்சருக்கும், பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல் பிரதி அமைச்சர் லஷ்மன் ஜயக்கொடிக்கும், பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல் அமைச்சரின் செயலாளர் டபிள்யூ. ரீ. ஜெயசிங்கா அவர்களுக்கும் பின்வரும் அவசரத் தந்தியை அனுப்பியுள்ளார்.

"யாழ்ப்பாணக் கச்சேரியில் கடமையாற்றுவதற்கு நீங்கள் அனுப்பிய வெடிமருந்து பரிசோதகர் திரு. ஆர். ஏ. வீரக்கொடி என்பவர் வெடிமருந்து பெறுவதற்கு தமிழில் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை முற்ருகப் புறக்கணிக்கிருர் எனவும் சிங்கள மொழிபெயர்ப்புத் தருமாறு வற்புறுத்துகிருர் எனவும் முறையிடப்பட்டுள்ளது. தமிழ் தெரியாத — ஆங்கிலமும் தெரியாது என்று நடிக்கின்ற உத்தியோகத்தரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி தமிழ் மக்களை சிறுமைப்படுத்தி துன்புறுத்துவதை உடனே நிறுத்துமாறும். இனி இவரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப வேண்டாம் என்றும், தமிழ் தெரிந்த ஒருவரை உடனே அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழர்கள் ஆளப்படுகின்ற அடிமை இனம் என்பதை இவரைப்போன்ற உத்தியோகத்தர்கள் கூட நிலைநாட்டுகின்றனர்.

## பேச்சுப் போட்டி நவம்பர் 5 இறுதி நாள்!

தலைமை தகைமைஉடையவர்களாக வேண்டும், நினைத்ததை முடிப்பவர்களாக வேண்டும், எண்ணிய எண்ணியாங்கு எய்தியவர்களாக வேண்டும் எம்மால் முடியும்' என முனைப்பு உடையவர்களாக இளைஞர்கள், தாம் முயற்சிக்கும் துறைகள் அத்தனைகளிலும் முன்னேற வேண்டும். இதற்கு நாவன்மை அவசியம்-பேச்சாற்றல் செயலாட்சி அவசியம் இத்தகைய இளைஞர்களை உருவாக்கும் பணியில் இலங்கை இந்து இளைஞர் பேரவை ஈடுபட்டு, அகில இலங்கைத் தமிழ்ப்பேச்சுப் போட்டியை நடாத்துகிறது. 271 செட்டியார் தெரு கொழும்பு-11 என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறுக விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் நவம்பர் 5ஆகும்.

# அமெரிக்க ஜனதிபதி தேர்தலில் வெற்றி ஜிம்மி கார்ட்டருக்கே!

### இலங்கை சோதிடர் கூறுகிருர்!

நவம்பர் 2ம் திகதி நடைபெறும் அமெரிக்க ஜனதிபதி தேர்தலில் அமெரிக்க ஜனதிபதியாக ஜிம்மி கார்ட்டரே வெற்றிபெறுவாரென்றும் பத்து வீதத்துக்குட்பட்ட பெரும்பான்மையேஇவருக்குக் கிடைக்குமென்றும், மயிலிட்டி காங்கேசன்துறையைச்சேர்ந்த அறிவியல் சோதிடர் திரு. ஏ. வி. கணேசநாதன் ஆருடம் கூறியுள்ளார். ஜிம்மி கார்ட்டர், 19-1-1977ல் பதவியேற்பார் என்றும் இவர் கூறுகிருர்.

வவுனியாவைச் சேர்ந்த சுதந்திரன் வாசகர் வ. ஆறுமுகம் என்பவர் எண் சாத்திரப்படி, ஜிம்மி கார்ட்டரே வெற்றிபெறுவார் என்று ஆருடம் கூறியுள்ளார்.

## முத்தமிழ் விழாவில் நாவலர் பேசுகிருர்!

மருதானை இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் தமிழ் மன்றத்தினர் எடுக்கும் முத்தமிழ் விழா 30-10-76 மாலை 4.30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறுகிறது. இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நாவலர் அ. அமிர்தலிங்கம் சிறப்புரை நிகழ்த்துகிருர். திருமதி அமிர்தலிங்கமும் உரை நிகழ்த்துகிருர். கருத்தரங்கு, நாடகம், கதாப்பிரசங்கம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறுகிறது.

# விளையாட்டுத்துறையிலும் இந்தியத் துவேஷம்!

## இராணுவ வீரர்களின் ஈனத்தனம்!

நட்புமுறையில் கால்பந்து விளையாடுவதற்காக இலங்கை வந்திருக்கும் இந்திய கால்பந்தாட்டக் கோஷ்டியினரை அவர்களுடன் போட்டிக்கு விளையாடிய இலங்கை இராணுவ சிங்களக் கோஷ்டியினா துவேஷம் பிடித்து ஈனத்தனமாகத் தாக்கியதாகவும், 'கள்ளத் தோணி, பற தமிழா' என்று கேவலமான வார்த்தைகளால் துஷித்ததாகவும் தெரியவருகிறது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:—

கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் இப்போது கால்பந்து விளையாட்டுப் போட்டி நடைபெற்றுவருகிறது. இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்காக இந்திய கேரள மாநிலத்திலிருந்து விளையாட்டுக் குழுவினர் வந்துள்ளனர். இவர்களுக்கும் இலங்கை இராணுவ கோஷ்டியினருக்கும் சென்ற 26-10-76 கால்பந்து விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியின்போது, கேரள கோஷ்டியினர் அடுத்தடுத்து இரண்டு கோல்கள் பேட்டு வெற்றியீட்டியபோது அவர்களுடன் விளையாடிய இராணுவ வீரர்களுக்கு அது சகிக்க முடியவில்லையாம். எனவே முரட்டுத்தனமான முறையில் தப்பாக இராணுவத்தினர் ஆடத்தொடங்கவே, நடுவர் பலமுறை எச்சரிக்கை செய்தாராம். இதில் மிகவும் தப்பாக முறைதவறி ஆடிய இலங்கை இராணுவவீரர் ஒருவரை நடுவர் திருப்பித் திருப்பி எச்சரித்தாராம்.

இலங்கை இராணுவ கோஷ்டியினர் ஒரு 'கோல்' போட முயன்றபோது கேரளா கோஷ்டியின் 'கோல் கீப்பர்' அதை மிகவும் சாதுரியமாகத் தடுத்து நிறுத்திவிட்டார். இதை சகிக்க முடியாத முன் எச்சரிக்கை செய்யப்பட்ட இராணுவ வீரர் கேரளா கோல்கீப்பரை விளையாட்டு விதிகளுக்கு மாருக காலால் தாக்கியதாகவும், இதைத் தொடர்ந்து இரு கோஷ்டியினருக்குமிடையே கலவரம் ஏற்பட்டதாகவும், கேரள கோஷ்டியினரை, இராணுவ கோஷ்டியினர், "கள்ளத்தோணிகள்" "பறத் தமிழர்கள்" என்று துவேஷமாக தூற்றியதாகவும் தெரிகிறது. நடுவர் விளையாட்டு விதியைமீறி கேரள வீரரை தாக்கியவரை வெளியேற்றிஞர்.

விளையாட்டு முடிந்ததும், விளையாட்டு மைதானத்தில் வைத்தே நடுவரை இராணுவ வீரர்கள் தாக்கிஞர்களாம். இதனல் ரசிகர்களிடையேயும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டதாகவும், இந்தசமயம் பார்த்து அங்கு நின்ற பொலிசாரும் மெதுவாக அவ்விடத்தைவிட்டு நழுவிவிட்டதாகவும் தெரியவருகிறது.

## கண்டியில் ஈழவேந்தன்

கண்டி — அம்பிட்டியாவிலுள்ள இலங்கை தேசிய குருத்துவ கல்லூரி ஞானப்பிரகாசர் தமிழ்க்கழகம் 31-10-76 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடாத்தும் ஞானப்பிரசார் விழாவில் 'எமதுஎதிர்காலம்' எனும் தலைப்பில் திரு. ஈழவேந்தன் உரையாற்றுகிருர். இவ்விழாவுக்கு அருட் திரு. கனியூட் தலைமைதாங்குகிருர்.

## உடப்பு, புத்தளம் பகுதிகளில் கூட்டணித் தலைவர்கள்

இன்று (31-10-76) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் உடப்பு கிராமத்திலும், மாலை புத்தளத்திலும் நடைபெறும் கருத்தரங்குகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் அ. ரகுபதி பாலசிறீதரன், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோர் கலந்துகொண்டு பேசவிருக்கின்றனர். புத்தளம் தமிழ் பேசும் இளைஞர் மன்றம் இதற்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறது.

## பன்குளம் தாக்குதல் நவம்பர் 1ல் அடையாள அணிவகுப்பு!

திருகோணமலையை அடுத்துள்ள பன்குளத்தில் பொது மக்கள்மீது ஆகாயப்படையினர் நடத்திய தாக்குதல் மீதான அடையாள அணிவகுப்பு எதிர்வரும் நவம்பர் முதல்நாள் திருகோணமலையில் நடைபெறவுள்ளது. தாக்குதலுக்குள்ளானவர்களில் சிலரான திரு. செ. பவளசிங்கம், திருமதி பவளசிங்கம், தர்மப்பிரகாசம் பவளசிங்கம், குமாரசாமி, தா. சுலோசலிங்கம் ஆகியோர் சந்தேக நபர்களை அடையாளம் காட்டவுள்ளனர். பாதிக்கப்பட்டோரின் சார்பில் அடையாள அணிவகுப்பின்போது திரு. பா. நேமிநாதன் பா. உ.. சட்டத்தரணி இரா. சம்பந்தர் ஆகியோர் ஆஜராவார்கள். சந்தேக நபர்கள் திரு. நேமிநாதனின் கோரிக்கைப்படி சிவில் உடையிலேயே அடையாள அணிவகுப்புக்கு நிறுத்தப்படுவார்கள்.

## சைவ மங்கையர் கழகத்துக்கு ஏன் இந்த ஆங்கில மோகம்?

கொழும்பில் சைவமங்கையர் கழகம் என்று ஒன்று இருக்கிறது. சைவத்தையும், தமிழையும் சைவமங்கையர்களிடையே வளர்க்கவேண்டிய இக்கழகம் ஆங்கில மோகத்திலும், கறுவாக் காட்டுப் பண்பாட்டிலும் சிக்கிச்சீரழிவதேன் என்று கொழும்பிலுள்ள சைவ அன்பர்கள் ஆத்திரத்துடன் கேட்கின்றனர்.

அண்மையில் (18-10-76) இந்தக் கழகம் இந்து மகளிர் கல்லூரி நிதிக்கு என்று கூறி பம்பலப்பிட்டி சிறீ கதிரேசன் மண்டபத்தில் ஒரு நாட்டிய நிகழ்ச்சியை நடத்தியது. இந்த நிகழ்ச்சியின்போது வந்திருந்தோர் நூற்றுக்கு நூறுவீதம் தமிழர்களே. ஆனல் அறிவிப்புக்கள் அனைத்தும் தனித்து ஆங்கிலத்திலேயே இடம்பெற்றன. மருந்துக்குத்தானும் ஒரு வார்த்தை தமிழில் இடம் பெறவில்லை. அது மட்டுமன்றி இந்நிகழ்ச்சியையொட்டி வெளியிடப்பட்டிருந்த கையேட்டிலும், முழுக்க முழுக்க ஆங்கிலமே ஆதிக்கப்படுத்தி நிற்கக் காணப்பட்டது.

ஏன் இந்த ஈனத்தனம்? ஆங்கிலத்திலா சைவமங்கையர் கழகம் சைவப்பண்பாட்டை சைவ மங்கையருக்கு பயிற்றுவிக்கப் போகிறது? சைவ மங்கையர் கழகம் போன்ற தமிழர் மத்தியிலுள்ள மன்றங்களுக்கு ஏன் தான் இன்னும் இந்த இந்த ஆங்கில மோகம் என்று கேட்கின்றனர் சைவத்தமிழ் அன்பர்கள்.

## பொதுத் தேர்த...

—1-ம் பக்கத் தொடர்

நிலையை உருவாக்குவதற்காக ஒரே நாளில் தேர்தல் நடத்தும் முறையை கைவிட்டு, அடுத்த தேர்தலை இரண்டு நாட்களுக்கு நடத்தும் சூழ்ச்சியில் அரசாங்கம் இறங்கக் கூடுமென்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

தெற்கில் தனக்குச் சாதகமான தொகுதிகளிலும், வடக்கு கிழக்கிலும் ஒரு நாளில் தேர்தலை ஆட்சியாளர் நடத்தக் கூடுமென்றும், ஏனைய தொகுதிகளில் இன்னேர் நாளில் தேர்தல் நடத்தக்கூடுமென்றும் இதே வட்டாரங்கள் கூறுகின்றன.

முதல் நாள் தேர்தலில் தனது கட்சியினர் தெற்கிலும் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் வடக்கு, கிழக்கிலும் வெற்றிபெறுவார்கள்; வடக்கு, கிழக்கில் தமிழர் விடுதலை கூட்டணிவெற்றி பெற்றதும், அதையே சுட்டிக் காட்டி, "நாட்டைப் பிரிக்கப்போகிருர்கள் தமிழர்கள்; எனவே அதை முறியடிக்க எங்களையே ஏனைய தொகுதிகளிலும் தெரிந்தெடுத்து அனுப்பி சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைபெறச்செய்யுங்கள்!" என்றவொறு பிரசாரத்தை மேற்கொண்டு தேர்தலில் வெற்றியீட்டலாம் என்று ஆளுங் கட்சியினர் சிலர் இப்போது கருதுகிருர்களாம்.

## அறிவித்தல்

எமது பிரதிநிதிகள் எனத் தம்மை அறிமுகம் செய்து கொண்டு ஏஜண்டுகளை நியமிப்பதற்கோ, அல்லது சந்தா, நிலுவைப்பணம் வசூலிப்பதற்கோ எமது அதிகாரபூர்வமான கடிதம் இன்றி வரும் எவரிடமும் பணம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல் தொடர்புகள் வைக்கவேண்டாம் எனவும், அப்படிக் கொடுக்கப்பட்ட, கொடுக்கப்படும் பணத்திற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லவென்பதையும் அறியத்தருகின்ரேம்.

இப்படிக்கு
நிர்வாகி
சுதந்திரன்.

## குடியேற்றவாசிகளு ...

—6-ம் பக்கத் தொடர்

யாசாலை, மகாஜன வித்தியாசாலைப் பிள்ளைகளும் உபகரித்தார்கள். இன்னும் கோப்பாய் பிரதிநிதி, உடுவில், மீனுட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம் ஆகியவர்கள் பெருந்தொகையான பணம் விதைகளை உபகரித்தனர். இவர்களைப்போல இன்னும்பலர் தங்களிடமுள்ள மேலதிக விதைகளை உபகரித்தால் குடியேற்றப் பகுதியெங்கும் பனந்தோப்பாகக் காட்சியளிக்கும். இப்பெருமை யாழ்ப்பாணத்தார் எல்லோரும் உரியதாகும்.

# கொழும்பில் சுடர் கலை இலக்கிய மன்றம்

### அங்குரார்ப்பணக்கூட்டம்!

ஈழத்தின் தலைசிறந்த கலை இலக்கியத் திங்களிதழான 'சுடர்' ஏட்டின் கொழும்பு வாசகர்கள் எதிர்வரும் 3-11-76 புதன்கிழமை மாலை 5 30 மணிக்கு சுடர் கலை இலக்கிய மன்றமொன்றினை கொழும்பில் ஆரம்பிக்க விருக்கிருர்கள். பம்பலப்பிட்டி லோறிஸ் வீதியில் அமைந்துள்ள 51ம் இலக்க இல்லத்தில் (புனித மரியாள் தேவாலயத்துக்கு எதிரில்) நடைபெறும் இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கொழும்பிலுள்ள சுடர் வாசகர்கள், வாசகிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சுடர் கலை இலக்கிய மன்ற அமைப்பாளர் திரு ஈசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வெள்ளையன் கறுப்பனை அடக்குவது ஏகாதிபத்தியம் கறுப்பனே கறுப்பனை அடக்குவது சோசலிசமா?"

## ஆனைக்கோட்டை கருத்தரங்கில் சிந்தனைச் சிற்பி கேள்வி!



**ஆனைக்கோட்டைஉயரப்புலம் பாரதி சனசமூக நிலையம் அண்மையில் ஏற்பாடு செய்திருந்த பொதுமேடைக் கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் சுயாட்சிக் கழகம், சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் இளைஞர் பேரவை சார்பாகப் பிரமுகர்கள் கலந்துகொண்டு தத்தம் கருத்துக்களை சொற்பெருக்காற்றினர்.**

சமீபகாலத்தில் இத்தகைய கருத்தரங்கொன்று வடபகுதியில் நடத்ததில்லை. எனவே அன்றைய கருத்தரங்கை அவதானிக்க ஏராளமான இளைஞர்களும் பொதுமக்களும் வந்திருந்தனர். இக்கருத்தரங்கிற்கு இளைப்பாறிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. சி. விசுவலிங்கம் தலைமை தாங்கினார். 'தமிழ் மக்களின் எதிர்காலம்' என்ற தலைப்பில் பிரமுகர்கள் கருத்துரை வழங்கினர். தமிழர் கூட்டணி சார்பில் கோப்பாய் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் சிந்தனைச் சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசும்போது குறிப்பிட்டதாவது:—

### வரலாற்றை திரிக்க முயற்சி

"ஈழநாட்டில் வாழும் தமிழ் இனம் தனித் தேசிய இனம். அவர்கள் மற்றெந்த இனத்தவர்களுக்கும் தாழ்ந்தவர்களல்லர். அவர்கள் சுயநிர்ணய உரிமை உள்ளவர்கள். இந்நாட்டு வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் தமிழ் தேசிய இனம் தனி இனமாக ஆட்சி செய்துவந்தது தெளிவாகும். அத்தகைய இனம் வெள்ளைக்காரன் வெளியேறியபின் தன் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதில் முன்னிற்பதுபற்றி எவரும் குறைகூற முடியாது.

"தமிழ் மக்களின் சரித்திரத்தை ஈழம் சுதந்திரமடைந்த 1948ம் ஆண்டிலிருந்து கணக்கிடமுடியாது. இந்நாட்டில் தமிழரின் சரித்திரம் 2000ம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்நாட்டில் காலனித்துவ ஆட்சி 350 வருடங்களாகத்தான் நிலவியது. அதற்குமுன்னர் தமிழ்ஈழத்தில் அன்று தமிழரசுதான் இருந்தது. இதனை மாற்றுக்கட்சியினர் மறைப்பது சரித்திரத்தை மறைப்பதாக இருக்கின்றது.

### கட்சி அரசியல் வேண்டாம்

"அந்நிய ஆதிக்கத்தின் பிடியினின்றும் இலங்கை விலகிய பின் தமிழர் சுதந்திரத்திற்கு தமிழ்க்கட்சிகள் என்ன செய்தன என்ற கேள்வி வேறு. கட்சிகள் விட்ட தவறுகளை இன்று சுட்டிக்காட்டுவதில் பயனில்லை. போனவை போக இனிமேல் எம்மை எதிர்நோக்கும் ஆபத்தான நிலைமைகளுக்குத் தீர்வுகாண தமிழினம் ஒன்றிணைந்து போராடவேண்டும். கட்சிகளைப்பற்றிப் பேசி தமிழினத்தின் உரிமைகளைப்பெற இனிமேல் வாய்ப்பில்லை.

"மனித உரிமை, மனிதத்துவம் இவற்றிற்கு உலக நாடுகள் என்ன செய்கின்றன. இப்பிரச்சினையை சிங்களநாட்டு அரசு எப்படிக் கருதுகின்றது. இன்று தமிழினத்திற்குச் சுயநிர்ணய உரிமை இருக்கிறதா? மனித உரிமை இருக்கிறதா என்ற கேள்விக்கு நாம் விடை காணவேண்டும்.

"பிறநாடுகளின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு கரிசனை காட்டும் இந்நாட்டுப் பிரதமர் தமது நாட்டிலுள்ள தமிழ் தேசிய இனத்தவரின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்காமலிருக்கின்றார். இன்று அடிமைகள் போல வாழும் தமிழினம் இந்நாட்டில் சுதந்திரமாக வாழவேண்டும். அவர்கள் தமது முழு உரிமைகளும் பெற்றுச் சுதந்திரமாக வாழவேண்டும். இதுவே எமது நோக்கமாகும்.

### இதுவும் ஏகாதிபத்தியமே

"சோசலிசம் பேசுகின்ற இன்றைய அரசும், கம்யூனிஸ்ட், சமசமாஜக்கட்சிக் கூட்டணிகளும், இந்நாட்டில் சாதிமுறையை மாற்ற அரசியல் சாசனத்தில் சட்டம் வேண்டுமென்று அரசியல் நிர்ணய சபையில் நாம் கேட்டபோது சட்டம் நிறைவேற்ற தயங்கினார்கள். இது எதைக்காட்டுகின்றது?

சோசலிசக்கட்சிகள் எதுவும் இதனைப் பாராளுமன்றத்தில் ஏன் என்று கேட்க முன்வரவில்லை. எமது கோரிக்கைக்கு ஆதரவு தரவும் பின்வாங்கின. வெள்ளைக்**காரன் கறுப்பனை அடக்கி ஆண்டால் அதுஏகாதிபத்தியம், கறுப்பன் கறுப்பனை அடக்கிஆண்டால் அது சோசலிசமா?**

"காலனித்துவம் கருவறுக்கப்படவேண்டும் என்று கதறும் இன்றைய சோசலிசவாதிகள் இந்நாட்டில் ஒரு இனம் இன்னொரு இனத்தை காலனி ஆட்சி நடாத்துவதை ஆதரிக்கின்றனர். இந்நாட்டில் தாம் தனித்து வாழ்வதன்மூலம்தான் உண்மையான தேசிய உணர்வுப் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும். இந்நாட்டுச் சரித்திரம் புகட்டும் பாடமாக இது இருக்கின்றது.

### கெஞ்ச மாட்டோம்

"நாகரிகமடைந்த நாடுகள் இன்று சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசுகின்றன. சோசலிச வாதிகளும் இதனையே பேசுகின்றனர். தமிழினத்திற்கு இந்நாட்டில் சுயநிர்ணய உரிமை இருக்கிறது என்பதை உணர வைப்பதே எமது முக்கிய நோக்கமாகும். சுதந்திரம் எப்போது கிடைக்கும் என்று சிலர் வினா எழுப்புகின்றார்கள். சுதந்திரம் கேட்டதும் கிடைக்க சுக்கு மிளகல்ல. சுதந்திரம் பெறுவதற்குக் காலம் குறிப்பிட முடியாது. சுதந்திரத்திற்கு தியாகமும், உறுதியுமே அவசியமாகும்.

"ஆனால் ஈழத்தைப் பொறுத்தவரை இன்று தமிழ் தேசிய இனம் பெற்றிருக்கும் விழிப்பைப் பார்க்கும்போது தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன் வாழும்நாள் அதிக தூரத்தில் இல்லை என்று கூறலாம். தமிழினம் இனிமேல் உரிமையைப்பெற அரசைக் கெஞ்சமாட்டாது, ஒப்பந்தங்கள் செய்யமாட்டாது அந்நிலை என்றோ மலையேறி விட்டது.

### சிவதாசன் பேச்சு

தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. க. சிவதாசன் பின்வருமாறு பேசினார்:—

"ஆண்டபரம்பரை மீண்டும ஆளவேண்டுமென்று நாம் கோரினால் கம்யூனிஸ்டுகள் அக்கூற்றைத் தவருகப் புரிந்துகொள்கிருர்கள். ஆண்டபரம்பரையை மீண்டும் ஆளவிடோமென்றும் பேசிவருகிருர்கள். ஆண்டபரம்பரை மீண்டும் ஆள்வதென்பது தமிழன் சுதந்திரமாக வாழவேண்டுமென்ற நோக்கமே. ஆண்டபரம்பரை என்பது குறிப்பிட்ட [illegible] குறிக்க வில்லை. தமிழ் சமுதாயத்தின் தலைமை எல்லாக்கட்சிகளிலுமிருக்கலாம். அது கட்சிகளின் மக்கள் ஆதரவைப் பொறுத்தது. ஆனால் அத்தகைய தலைமை பிற்போக்கு, பாசிச நடவடிக்கையில் சென்ருல் த. இ. பேரவை அதனை எதிர்த்து நிற்கும்.

### தீண்டாமை யொழிப்பு

"தீண்டாமையைப் பொறுத்தவரை நாம் இதய சுத்தியுடன் அதனை ஒழிக்க முயலுகிறோம். 1956ல் இராசவரோதயமும், வன்னியசிங்கமும் பாராளுமன்றத்தில் தீண்டாமை ஒழிப்புச் சட்டமூலத்தைக் கொண்டுவந்தனர். அச்சட்டமூலம் மூச்சுப்பேச்சற்று கிடக்கவே ஐ. தே. கட்சியுடன் சேர்ந்திருந்த தமிழரசுக்கட்சியினர் 1965ல் அதனை நடைமுறைப் படுத்த முன்வந்தனர். அச்சுவேலியிலும், யாழ்ப்பாணத்திலும் சிறுபான்மையினர் குடியேற்றத்திட்டமும், வீடமைப்புத் திட்டமும் வர தமிழரசுக் கட்சியினர் முன்னின்றுழைத்தனர்.

"தொகுதி வாரியாக நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரூபா. 5000/-ம் பெறுமதியான காணிகளை அவர்கள் பெற்றுக்கொடுத்தனர்.

"இன்று தீண்டாமைக்கு சாவுமணி அடிக்கவேண்டுமென்றும் வர்க்க பேதம் ஒழியவேண்டுமென்றும் குரலெழுப்பும் இடதுசாரிகளின் வரலாறு இலங்கையில் சின்னாபின்னப்பட்ட வரலாருகவே விளங்குகின்றது. பொதுமக்களின் செல்வாக்கு இடதுசாரிகளுக்கு வடக்கிலும் சரி தெற்கிலும் சரி சரிந்துவருகின்றது.

### முதலில் விடுதலை வேண்டும்

"1920ல் சூரியமல் இயக்கம் 1935ல் லங்கா சமசமாசக்கட்சியில் டாக்டர் என். எம். ஒரு பக்கம்; டாக்டர் கொல்வின் மறுபக்கம் பின்னர் இருவரும் இணைந்ததும் டாக்டர் என். எம்., டாக்டர் கொல்வின் ஒருபுறம் பிலிப், சமரசக்கொடி இன்னொரு புறம். கம்யூனிஸ்ட் கட்சியில் மொஸ்கோ ஒரு பக்கம்; பீக்கிங் மறுபக்கம். மாஸ்கோ கம்யூனிஸ்ட்கட்சியிலும் விக்கிரமசிங்கா ஒரு புறம் பீட்டர் கெனமன மறுபுறம். பீக்கிங் கட்சியிலும் சண்முகதாசன் ஒரு பக்கம் ரெசாரியோபீரிஸ் இன்னொருபக்கம். இடதுசாரிகளின் சக்தி எப்படி விரயமாகிறது இலங்கையில் என்பது இதனால் தெளிவாகத் தெரிகின்றது.

"தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம உரிமை கோரிய லங்கா சமசமாசக்கட்சியின் இன்றைய நிலை என்ன? மலையகப் பிரச்சினையில் மனச்சாட்சியுடன் செயல்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் இன்றைய நிலை என்ன? தமிழருக்கு உரிமைகள் வழங்க வேண்டுமென்ற எட்மன்ட் சமரசக் கொடியின் இன்றைய அஞ்ஞாதவாசம் எப்படி? வகுப்புவாதம் பேசியவர்கள் தெற்கில் வாழ



முடியவில்லை. தமது கொள்கைகளைக் கடைசிவரை காத்துக்கொள்ள முடியவில்லை.

"இடதுசாரிகள் வர்க்கம் என்கிருர்கள். நாம் இனம் என்கிறோம். இனத்தின் விடுதலைக்கு நாம் அனைவரும் முதலில் ஒன்றுபட்டுப் போராடுவோம். பின்னர் வர்க்கப் பிரச்சினைக்கு நீங்கள் சொல்லும் வழியில் புரட்சி செய்வோம்.

'இவ்வாறு இருவரும் ஐ. தே. கட்சி, சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி பேச்சாளர்களின் கருத்துக்களுக்கு வெட்டொன்று துண்டு இரண்டாகப் பதிலிறுத்தனர்.

திரட்டித் தருபவர்:
—புதுதொளி

---

## குடியேற்ற வாசிகளுக்கு மீண்டும் மீண்டும பனம்விதைகள்

மில்க்வைற் தொழிலதிபர் ஒரு வாரத்தில் மூன்ரும் முறையாக உருத்திரபுரம், தேவிபுரம், உடையார்கட்டு, தர்மபுரம், கனகாம்பிகை குடியேற்றம், சுதந்திரபுரம், முரசுமோட்டை, கண்டாவளை, திருவையாறு, இரணைமடு, திருநகர், முதலிய இடங்களில் எழுபத்தையாயிரம் பனம்விதைகளை நடுவதற்கு உபகரித்துள்ளார். மில்க்வைற் பிரசாரப் பகுதியினர் மரம் நாட்டும் பணியையும், பனை அபிவிருத்தி சம்பந்தமான பாடல்களை ஒலிபெருக்கியில் படித்தும் பலபிரசுரங்களை விநியோகித்தும் பொதுமக்களை மரம் நாட்டுப் பணியில் தூண்டினர். குடியேற்றப்பகுதி மக்கள் கரும்பு, மாதுளம் பழம் முதலியவற்றை மில்க்வைற் தொழிலதிபருக்குக் கொடுத்து வாழ்த்தி மகிழ்ந்தார்கள.

கிளிநொச்சியில் விநியோகபான பெருந்தொகையான பனம் விதைகளை இனுவில் சைவப்பிரகாச வித்தி

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லவர்கள் கேட்கிறார்கள்:**

# இதுவோ, அய்யா சோசலிசம்?

— முனைவர் சாலை இளந்திரையன்

இலங்கை அரசின் தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது, அரசிலே உள்ள தோழர்கள், என்னென்னவோ காரணங்களைக் காட்டி, அவைகளைத் தட்டிக் கழிக்கிறார்கள்: "மொழிச் சிறுபான்மையினரின் உரிமை மறுக்கப்படுகிறது" என்றால், —உடனேயே, "இது இனவாதம், இது ஒழிக!" என்கிறார்கள்; 'அரசுத்தொடர்புடைய சிலருக்கே சலுகை அளிக்கப்படுகிறது. மற்ற மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்" என்று சொன்னால், — உடனேயே 'இது பிற்போக்குவாதம், — இதிலே அந்நியச் சூழ்ச்சி அடங்கி இருக்கிறது' என்கிறார்கள். ஆனால், இத்தகைய வார்த்தைத் திரைகளால் உண்மையை எத்தனை காலம்தான் மறைத்து வைத்திட முடியும்?

## குட்டு உடைந்தது

சோற்றிலே புதைத்து வைத்த அந்த முழுப்பூசணிக்காய், இதோ மேலே வந்து தலையைக்காட்டிவிட்டது. இலங்கையின் ஆளும் கட்சியைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் குட்டி மந்திரிகளுமே இதற்குச் சாட்சியம் அளித்துவிட்டார்கள். ஒருவர் இருவர் அல்ல,— நாற்பது பேர், "வாயுள்ள அமைச்சர்களும் எம். பிக்களும், அரசுச் சலுகைகளை எல்லாம் சுருட்டித் தமதாக்கிக்கொள்ளுகிறார்கள்' என்று குற்றப் பத்திரிகை படித்துள்ளார்கள்.

"ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களிலே வாயும் வலுவும் (வேறு செல்வாக்குகளும்) உள்ளவர்கள், அரசாங்கத்தின் சார்பில் ஏற்படும் வேலை வாய்ப்புக்களை எல்லாம் தங்கள் தங்கள் தொகுதிகளுக்கே வாரிக்கொண்டு போய்விடுகின்றார்கள்; அடுத்துவரும் தேர்தலை முதன்மைப்படுத்தி, இவர்கள், இப்படித் தங்கள் தொகுதியினரைக் 'குளிப்பாட்டி' வருகிறார்கள். தங்கள் தேர்தல் வெற்றியை உறுதி செய்யும் பெரிய ஆர்வத்திலே,—இவர்கள், 'நாட்டிலுள்ள எல்லாப் பகுதியினருக்கும் வாய்ப்புகள் சீராகப் பகிர்ந்து வழங்கப்படவேண்டும்' என்னும் சோசலிச (பொதுமை நல) அடிப்படைக்கே வேட்டு வைத்து வருகிறார்கள்!"

இதுதான் ஆளும் கட்சியைச்சேர்ந்த நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் குற்றச்சாட்டு. நன்றாகக் கவனிக்கவேண்டும்: இவர்கள் எந்த எதிர்க்கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்ல, — எல்லோரும், நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் கட்சிகளைச்சேர்ந்தவர்கள்.

## தன்னையே தின்று...

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து, மனிதனையே கடித்தது' என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல, —ஆட்சிக் கூட்டணியிலே உள்ள வல்லவர்கள்,—முன்பு எதிர்க்கட்சிகளை ஒழிப்பதற்காகத்தான், அந்தக் கட்சிகளின் ஆதரவாளர்களுக்குப் பதவிச் சலுகைகளை வழங்கி வந்தார்கள்; இப்போது தங்கள் கூட்டணியைச் சேர்ந்தவர்களையே வீழ்த்தித் தாங்கள் மட்டும் வெற்றிபெறுவதற்கு அதே தந்திரத்தைக் கையாளத்தொடங்கி விட்டார்கள். ஒரே ஒரு கட்சி, அல்லது அதனோடு இணைந்த கூட்டணியின் அளவாகக் கூடச் செயற்பட முடியாத இந்தச்செயல்முறை, பச்சையான தனிமனிதச் சுயநலம் ஆகலாம்; நிச்சயமாகச் சோசலிச நடைமுறை ஆகவே ஆகாது.

முன்பெல்லாம், — எதிர்க்கட்சிகளை உடைப்பதற்காகவே, தெருவில் நின்ற சிலபேருக்கு அரசு பெரிய பதவிகளைக் கொடுத்தது என்றுசொல்லப்பட்டது; அப்படிப் பதவி பெற்றவர்கள்,— தங்களுக்கு மக்களிடம் எந்தச்செல்வாக்கும் இல்லாத காரணத்தால்,— பதவிகளைக்கொடுத்துத் தங்களைச் சுற்றுவதற்கும், தங்களுக்குக் கட்டியம் கூறுவதற்கும் ஆள்பிடித்தார்கள் என்றும் சொல்லப்பட்டது. இப்போது, ஒரே கட்சிக்காரர்கள் ஒருவரை ஒருவர் கீழறுக்கவே இந்த உத்தியைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள்!

## கிழக்கத்தியநோய்

அரசியல் என்பது ஒரு வகையான சாக்கடையாகத்தான் ஓடிக்கொண்டு இருக்கிறது; அதிலே, சில வகையான தரக்குறைவு, தகைமைக் குறைவு என்றும் நாற்றங்கள் எழுவது தவிர்க்க முடியாதது. ஆனால், உலகில் தோன்றியுள்ள சமுதாயப் பொருளாதார அமைப்புகளிலேயே தலைமை சான்றதான பொதுமை நல (சோசலிச)த் தடத்திலே நடப்பவர்கள் இப்படி முடைநாற்றம் வீசமுடியாது; அவர்கள் முதலாவது தரத்தைக் காப்பாற்றியே ஆகவேண்டும்.

புதிய கிராப்புத் தலைக்குள்ளேயும் ஆடம்பரமான ஆங்கிலேய முறை ஆடைக்குள்ளேயும், நம்முடைய மக்கள் பழைய பத்தாம் பசலிகளாகவே இருந்து வருவது போல, — சோசலிசம் என்கிற தத்துவத்தின் பெயரால் நம்மவர்கள் பழைய நாட்டான்மைத் தனத்தையே நடத்தி வருகின்றார்கள். இது இலங்கைநாட்டை மட்டுமே பிடித்த ஒருநோய் அல்ல; முன்னேற்றமடையாத கீழைநாடுகள் பலவற்றிலே இந்த நோய் பரவியுள்ளது.

நாடு முழுவதுமே, எல்லா வகையிலும், பற்றாக்குறை உடையதாக இருக்கும் போது,– அதன் ஒரு சில பகுதிகளுக்கே புதிய வாய்ப்புகள் சென்று சேரவும், ஏனைய பகுதிகள் வற்றிவரளவுமான நிலைமை உருவாக்கப்பட்டால், நாட்டு மக்களிடையே சோசலிசப்பொது ஓர்மை ஏற்படமாட்டாது. (பதவி) உடையவர்கள் என்றும் (பதவி) இல்லாதவர்கள் என்றும் மக்களைப் பிரித்து வைக்கும் நடைமுறை தொடரும்போது, அங்கே பொது ஓர்மை எப்படி ஏற்படமுடியும்?

## உடனே நிறுத்துக!

இலங்கை நாட்டிலே நடைபெறுவதாக இந்த நாற்பது பேர் எடுத்துக் காட்டியிருக்கும் ஓரவஞ்சனை யாரோ சிலபேரின் சுயநல நடை மட்டும் அல்ல; சோசலிசத் தடத்திலே போடப்படும்பெரிய முட்டுக்கட்டை இது. வேலை வாய்ப்புக்கு ஏங்கி நிற்கும் பல லட்சம் மக்களிலே சில நூறுபேரைத் தனிப்பிரித்து, அவர்களுக்கு மட்டும் சலுகை வழங்கிவிட்டால்,—அந்தச் சிலபேரே, நேற்றுவரை தங்களோடு இருந்த வேலை இல்லாதோரை அடக்குவதற்குத் திட்டம் தீட்டித் தருவார்கள்! இதுவரை முதலாளி வர்க்கம் நடத்தி வருகிற நாடகம் இது தானே? இலங்கை அரசும் அதன் கூட்டணியும், உண்மையாகவே சோசலிசத்திலே நாட்டம் உடையவர்களாக இருந்தால், இந்தக் கீழறுப்பு வேலையை இப்போதாவது அவர்கள் நிறுத்தவேண்டும். "பேசுவது மானம், இடை பேணுவது காமம்" என்பது போல, — பேசுவது சோசலிசம், நடைமுறைப்படுத்துவது வேறோர் இசம் என்றால் —அது, நீண்ட நாள் நடைபெறமுடியாது அல்லவா?

# அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய அரிமா!

## மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவை நெஞ்சில் இருத்துவோம்!

க. தர்மலிங்கம்
முள்ளியவளை

**திக்கெட்டும் கடலால் சூழ்ந்த எழில்மிகு ஈழத்திருநாட்டின் வட பகுதியிலே, வடக்கே யாழ்ப்பாண பரவைக் கடலையும், தெற்கே அருவியாற்றையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும் எல்லையாகக்கொண்டு விளங்குவது வன்னி நாடு.**

வன்னி நாட்டின் வரலாற்றில், மன்னர்கள் வரிசையில் வன்னி மக்களின் நெஞ்சில் நீங்காது இடம் பெற்றவன் குலசேகர வைரமுத்து பண்டாரவன்னியன். பிறந்த மண்ணில் பிறரை மிதிக்க விடாது வன்னிநாட்டைக் காத்த மன்னர்களில் இறுதி மன்னன். அன்னியர்க்கு அடிபணியாது தன் இறுதி மூச்சிருக்கும்வரை அடங்காது ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னமாக விளங்கியவன். "அஞ்சினவர்க்கு. சதமரணம்; அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கொரு மரணம்" என்று கூறி நின்ற அஞ்சா நெஞ்சன்—வீரத்தின் சின்னமவன்.

குளம்பல கொண்டு வளம் பல நிறைத்த வன்னி நாடு வீரம் செறிந்த மன்னன் பண்டார வன்னியன் ஆட்சியின்கீழ் செல்வம் கொழிக்கும் ...ாகத் திகழ்ந்தது. செந்நெல், தேன், தேக்கு நிறைந்தும் மலிந்தும் கிடந்தது. இதனைக் கண்ட அன்னியர்—கறுவா வாங்கவந்த கயவர்கள் — வன்னி நாட்டின்மீது காதல் கொண்டனர். அதன் காரணமாக வன்னிநாட்டை தமது கையின்கீழ் கொண்டுவர வேண்டுமென உறுதிபூண்டனர், வெள்ளங்கியைக் கண்டால் வீழ்ந்துவிடுவான் பண்டாரவன்னியன் என்று எண்ணிக் கப்பம் கேட்டனர். மாற்றானுக்கு மண்டியிட்டும் பழக்கமில்லாத பண்டாரவன்னியன் கப்பம்கொடுக்க மறுத்து மானங்கெட்டவர்களை துரத்த விடுதலைப் போர் தொடுத்தான்.

கற்பூரப் புல்வெயிலில் நடந்த போரில் ஆங்கிலேயரைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான். 1803ம் ஆண்டில் முல்லைத்தீவுக் கோட்டையைத் தாக்கி கப்டன் றிபேக் தலைமையில் உள்ள படைகளை பின்வாங்கச் செய்தான். அஞ்சிய ஆங்கிலேயர் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை என்னும் இடங்களில் இருந்து படைதிரட்டி மும்முனைத் தாக்குதல் செய்தனர். எதற்கும் அஞ்சவில்லை பண்டாரவன்னியன்.

நேருக்குநேர் நின்று போர் செய்து பண்டாரவன்னியனை வெல்லமுடியாது என்று கண்ட பிரித்தாளும் தந்திரத்தையுடைய பிரித்தானியர்கள் கரிக்கட்டுமூலை அரசன் காக்கை வன்னியனை நாடினர். நாவல்லவர்கள் அல்லவா? நாடுபிடிக்கும் நோக்கத்தோடு காக்கை வன்னியனைத் தம்வசமாக்கி பண்டார வன்னியன் படைகளைக் காட்டித்தரும்படி கேட்டனர். எட்டப்பர் கூட்டத்து வழித்தோன்றல் சுதந்திர உணர்ச்சியற்ற காக்கை வன்னியவன் காட்டிக் கொடுத்தான்.

நிராயுதபாணியாக நின்ற பண்டாரவன்னியனையும் அவனது படைகளையும் கண்ட ஏகாதிபத்தியவாதிகள் இது தான் தக்க சமயமெனக் கண்டு துப்பாக்கிமுனை கொண்டு தாக்கினர். நிராயுதபாணியாக நின்றும்கூட புறமுதுகிட்டோடாது அவர்களை எதிர்த்து நின்று போராடி இறுதியிலே தோற்கடிக்கப்பட்டான்.

அன்னைபூமியை அந்நியர் கையில் இருந்து காப்பாற்ற அயராது பாடுபட்ட பண்டார வன்னியனை 1803 அக்டோபர் 31ம் நாள் கற்சிலைமடுவில் தோற்கடித்தனர். ஆங்கிலேயர் தமது புகழை நிலைநாட்ட அமைத்த கற்சிலை; பண்டார வன்னியன் வீரத்தை இன்றும் பறைசாற்றிக்கொண்டு இருப்பதே அவனது வீரத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

ஏகாதிபத்தியவாதிகளுக்கு அஞ்சாது, தாய்நாட்டின் சுதந்திரத்தைக் காத்து தன் இறுதி மூச்சு இருக்கும்வரை வன்னிநாட்டில் ஓரடி மண்ணைக்கூட மிதிக்கவிடாது சுதந்திரமாக மிளிரச் செய்தான். அத்தகைய வீரம் செறிந்த மன்னனுடைய நினைவுதினம் 31.10.76 ஆகும். இன்றே பண்டார வன்னியன் விட்டுச்சென்ற விடுதலைப் பணியை ஏற்று காட்டிக்கொடுக்கும் இனத்தை அகற்றி மீண்டும் சுதந்திர இனமாக வாழ்வோம்.

"வாழ்க பண்டார வன்னியன்."

"தென்னை வளம்"

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் ஏதாவது இரண்டு அனுப்பி மேற்படி புத்தகம் ஒன்றைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

விளம்பரப்பகுதி:

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தமிழ் ஈழத்தின் கீழைத்தென்கோடியி....

—1-ம் பக்கத் தொடர்

னந்த இந்து இளைஞர் மன்ற தலைவரும், உகந்தைமலை முருகன் கோவில், பொத்துவில் ஆலையடிப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபைத் தலைவருமான திரு. எம். கனகரெத்தினம் ஜே. பி. அவர்களின் தலைமையில் பொத்துவில் சைவப் பெரியார்களும் பொத்துவில் பாணமைப் பொதுமக்களும் இளைஞர்களும் இப்புனித ஆக்கவேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்நிலையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிகாரியும், பொத்துவில் பிரதி அரசாங்க அதிபரும் மற்றும் பௌத்த சிங்கள ஏகாதிபத்திய விஸ்தரிப்புவாதிகளும் திட்டம் வகுத்து உகந்தைக்கு சற்று தொலைவில் உள்ள 'குரும்பிக்கலை' பௌத்த — விகாரை குருவிடம் தூண்டிவிட்டு உகந்தை முருகன் கோவில் நிலம் குறிப்பிட்ட குரும்பிக்கலை பௌத்த கோவிலுக்கு சொந்தமானதென்றும், இக்கோவிலை புனர் நிர்மானம் செய்வதாயிருந்தால் குறிப்பிட்ட பௌத்த சங்கத்திடமும் அதிகாரிகளிடமும் அனுமதி பெறவேண்டுமெனவும் எச்சரிக்கைவிடுத்து புனித வேலைகளை இடைநிறுத்தினர்.

இதை ஆட்சேபித்த உகந்தை கோவில் நிருவாக சபையினர் அம்பாறை மேல் நீதிமன்றத்தில் கல்முனை மாவட்ட வழக்கறிஞர்கள் சகிதம் வழக்குத்தொடர்ந்து கடந்தமாதம் 30-9-76ல் நீதிபதியினால் தீர்ப்புக் கூறப்பட்டது. நீதிபதி தமது தீர்ப்பில் உகந்தைக்கோவிலில் யாரும் உரிமை கோருவதாயின் சிவில் வழக்குத் தொடரவேண்டுமென உத்தரவிட்டார்.

இந்நிலையில் கடந்த 8-10-75ல் உகந்தை முதல் வெருகல் வரையிலான கிராம யாத்திரை, திரு. எம். திருச்செல்வம் கியூ. சி. அவர்களால் உகந்தை கோவிலிலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்குப்பின் 'இது கோவில் அல்ல; இது தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரகசிய செயலகம்' என இனவெறியை தூண்டும் அரசாங்கஅதிபர் கும்பல் வீணை வதந்திகளைப் பரப்பத்தொடங்கியது. இக்கோவில் நிர்வாக சபையினர் புனர் நிர்மான முதல் வேலையாக சுற்றுமதில் கட்டும்பொருட்டு 22-10-76ல் அடிக்கல்லை நாட்டினர். ஆனல் 23-10-76ல் இக்கோவில் தலைவரிடம் பொத்துவில் பொலிஸ் அதிகாரி கோவில் புனர் நிர்மானத்தை உடன் நிறுத்தவேண்டும் என்றும் அல்லாவிடின் கோவில் பணியாளர்களை கைது செய்யுமாறு தங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினர்.

இதற்கு விளக்கம் கேட்டபோது "உகந்தை கோவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் குகையாக" இருப்பதனல் இக்கோவில் பணியில் தொழில் புரிபவர்களை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் கைதுசெய்யுமாறு உத்தரவு இட்டுள்ளார் எனக் கூறினராம்!

இதற்கு கோவில் தலைவர் பதிலளிக்கையில்— "நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய நாங்கள் இப்பணியைச் செய்கின்றேம். இதை யாரும் இடைநிறுத்த முடியாது" எனக் கூறினர் இதைக் கருத்தில் கொண்டு. "முத்தமிழ் முருகனின் சத்திய வேல் சாட்சியாக நீதிக்காகப் போராட மண்டூர் முதல் — பாணமைவரையிலான பெரியார்களும், இளைஞர்களும் இவ்வேலைத்திட்டத்தில் இறங்கி சிறை செல்ல தயாராகி விட்டனர்.

## தொழில் திணைக்கள தமிழ் ஊழியர்கள் அன்பளிப்பு!

கொழும்பு தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த தமிழ் ஊழியர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் குடும்ப — சட்ட உதவி நிதிக்கென ருபா ஐநூற்றியொன்றை வழங்கியுள்ளனர்.

---

இந்நிகழ்ச்சிக்குப்பின் இப்பகுதியே சோகத்தில் உள்ளது. உகந்தை புனித பணி எத்தனையோ ஆயிரம் பேரைக் கைதுசெய்தாலும் தொடரும் என இளைஞர்கள் திடசங்கர்ப்பம் கொண்டுள்ளார்கள்.

—தகவல்
தமிழ்சண்
பொத்துவில்


செல்லமகால் 2வது வாரம்

உங்கள் அபிமான
மரிக்கார்
அப்புக்குட்டி
உபாலி
ஐயர்

வானெலியில் கும்மாளமடித்த கோமாளிகளை திரையில் பார்த்து மகிழப் போகின்றீர்கள்...
அமர் ஜோதி மூவிஸ்
அளிக்கும்
எஸ். ராம்தாஸின்

கோமாளிகள்
கதை—வசனம்
எஸ். ராம்தாஸ்

தயாரிப்பு:
எம். மொகமட்

டைரக்ஷன்—எடிட்டிங்
எஸ். ராமநாதன்

கெயிட்டி 6வது வாரம்

சிவகுமார், ஜெயசுதா, ஸ்ரீப்பிரியா, கமலஹாசன், தேங்காய் சீனிவாசன், அசோகன், மனோரமா, டி. கே. பகவதி, பண்டரிபாய், ஜயலக்ஷ்மி —நடித்த

பட்டிக் காட்டு ராஜா
ஈஸ்மென் கலர்

கதை, வசனம், டைரக்ஷன்
கே. சண்முகம்

கிங்ஸ்லி-லிடோ 7வது வாரம்
(கொழும்பு) (யாழ்நகர்)

சிவாஜி கணேசன், ஜெயலலிதா, மஞ்சுளா
மேஜர் சுந்தரராஜன் முத்துராமன்,
மற்றும் பலர் நடித்த

அவன் தான் மனிதன்

(ஈஸ்ட்மென் கலர்)

திரைக்கதை டைரக்ஷன் — A. C. திருலோகச்சந்தர் M. A.

பிளாசா 2வது வாரம்

மரிக்கார், அப்புக்குட்டி, உபாலி, ஐயர்,
சில்லையூர் செல்வராசன்-கமலினி நடித்த

கோமாளிகள்

கெப்பிட்டல் 2வது வாரம்

எம்.ஜி.ஆர்.—சரோஜாதேவி நடித்த-
பணக்கார குடும்பம்
புதியகொப்பி
எதிர்பாருங்கள்!
தேவரின்
திருவருள்
ஈஸ்மன் கலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 31-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.